Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 03 18 - 12 - 94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 303

## 2000 ஆம் ஆண்டில் தொழிலாளருக்கு வாரத்தில் 3 நாளே வேலைகிடைக்கும்

இரண்டாயிரமாம் ஆண்டளவில் வாரத்திற்கு 'மூன்று வேலை நாட்கள்' மட்டுமே இருந்து வரும் என இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலில் ஐரோப்பாவின் ஐக்கிய அரசுகள் 1993 டிசம்பரில் இருந்து இத்திசையை நோக்கி முன்னேறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐரோப்பாவின் மிகப்பெரிய கைத்தொழில்துறை நிறுவனமான 'போக்ஸ்வகன்' கம்பனி அதன் தொழிற்சங்கத்தலைவர்களுடன் அப்பொழுது ஓர் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. இந்த உடன்படிக்கையின்படி இக் கம்பனியைச் சேர்ந்த தொழிலாளர்கள் எதிர்காலத்தில் 'வாரத்தில் நான்கு நாட்கள்' மட்டுமே வேலை செய்வது என இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலை தொடர்பாக ஐரோப்பிய பல்கலைக்கழக நிபுணர்கள் கேள்விக் கணைகளை எழுப்பியுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (05)

### ரணிலின் பதவி உறுதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்காவை ஐ. தே. க. வின் வருடாந்த மாநாடு நேற்று உறுதிப்படுத்தியது.

இம்மாநாடு ஐ.தே க.வின் 40-வது வருடாந்த மாநாடு என்பது குறிப்பிடத்தக்கது.

# ராணுவக் கட்டமைப்பில் விரிவாக்கம்; 20 அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு!

## சிலரின் அதிகாரதுஷ்பிரயோகம், ஊழல் கட்சியின் தோல்விக்கு காரணம்

### ஐ. தே. க மாநாட்டில் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள சிலர் பதவியிலிருந்த போது மேற்கொண்ட அதிகார துஷ்பிரயோகம், ஊழல் ஆகியனவே தேர்தலில் கட்சி தோல்வியடையக் காரணம் என ஐ.தே.க தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுநடைபெற்ற ஐ.தே.கவின் 40-வதுவருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும் போது, சட்டத்தின்முன்குற்றவாளிகளாக காணப்படும் எந்த ஒரு உறுப்பினரையும் கட்சியிலிருந்து வெளியேற்ற

(6ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பை பலப்படுத்துமாறு சந்திரிகாவுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்பை அதிகரித்துக்கொள்ளுமாறு அரசாங்க புலனாய்வு வட்டாரங்கள் அவருக்கு ஆலோசனை கூறியுள்ளன..

விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படை அணிகள் கொழும்புக்குள் ஊடுருவியதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து இவ்வாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று தெரிவித்துள்ளது

இதேவேளை சில சிரேஷ்ட அமைச்சர்களுக்கும் பாதுகாப்பை அதிகரித்துக்கொள்ளுமாறு புலனாய்வு வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

மேலும் பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட விசேட அணியொன்றும் தமிழர்கள் தங்கும் விடுதிகளில் சோதனைகளை மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரிகளை மேற்கோள்காட்டி அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## போர்முனைக்குச் செல்ல பின்னிற்கும்

## உயர் அதிகாரிகள் அதிருப்தி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஒன்பது பிரிகேடியர்கள், மேஜர் ஜெனரல் தரத்துக்கும், பதினொரு கேணல்கள், பிரிகேடியர் தரத்துக்கும பதவியுயர்த்தப்பட்டுள்ளனர். இதனால் சிறிலங்கா இராணுவத்தின் உயர் பீடத்தின் கட்டமைப்பும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, தற்போது வழங்கப்பட்டுள்ள பதவியுயர்வுகள் மூத்த இராணுவ உயரதிகாரிகள் பலருக்கு அதிருப்தியை அளித்திருப்பதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முப்படைகளின் பிரதம தளபதி என்ற முறையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, இராணுவத் தளபதி ஜெரிடி சில்வா சமர்ப்பித்திருந்த பட்டியலிலிருந்து புதிய பதவி உயர்வுகளை இராணுவ உயரதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

இதன் காரணமாக சிறிலங்கா இராணுவத்திலிருக்கும் மேஜர் ஜெனரல்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் உயரதிகாரிகள் அடங்கும் இராணுவ தலைமைப்பீடத்தின் கட்டமைப்பும் விரிவாக்கம் பெற்றுள்ளது.

பதவி உயர்வுகளை பெற வேண்டிய அதிகாரிகளின் பட்டியலை இராணுவத் தளபதி ஜெரிடி சில்வா கடந்தவாரம் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருந்தார். இப் பட்டியலில் பதவி உயர்வுக்கென குறிப்பிடப்பட்டிருந்த பல அதிகாரிகள் கனிஷ்ட தரத்தவர்கள் என்றும் பல மூத்த அதிகாரிகளுக்கும் மேலாக இவர்கள் சிபாரிசு செய்யப்பட்டிருந்தனர் எனவும் கண்டனம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையிலும் பாரிய மாற்றங்கள்

[கொழும்பு]

சிறிலங்கா கடற்படையில் பாரிய மாற்றங்கள் இவ்வாரத்தில் செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் கடற்படையின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான இயக்குனர் ஏ. டப்ள்யூ. கே. சாந்தகிரி கிழக்குப் பிராந்திய பதில்

கின்றார்.

மேற்கு பிராந்திய கொமாண்டர் ஜே. டி. ஜே. சுந்தரம் பதில் கடற்படை நடவடிக்கைக்கு பொறுப்பாளராக பதவியேற்கின்றார்.

## விமானநிலையவிஸ்தரிப்பை

# போர்முனைக்குச் செல்ல பின்னிற்கும் பொலிசார் மீது சட்டநடவடிக்கை

வடக்கு-கிழக்கு போர் முனைகளில் கடமையாற்ற பின்னிற்கும் பொலிசார் மீது சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸ் திணைக்களம் நடவடிக்கைகள்எடுத்து வருவதாக கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட 40 பொலிசார் மீது இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவர்கள் போர் நடைபெறும் இடங்களில் புதிதாக திறக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு செல்லுமாறு கேட்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் ஒரிருவரைத் தவிர மற்றவர்கள் தங்கள் சேவையைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்யவில்லை எனவும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போர் நடைபெறும் பிரதேசங்களில் ஐந்து வருடங்களுக்கு மேல் சேவையாற்ற வேண்டியிருக்கும் என கடமையை பொறுப்பேற்காதவர்கள் தயங்குவதாகவும் இதனால் தொடர்ந்து வடக்கு-கிழக்கில் சேவையாற்றும் பலரை தென்பகுதிக்கு அனுப்பும் அரசாங்கத்தின் முடிவை சரிவர அமுல்படுத்த முடியாமலிருப்பதாகவும் பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அமெரிக்க வானொலி நிலையம்குறித்து பாப்பரண்டவரிடம் மனு சமர்ப்பிப்பர்

(கொழும்பு)

இரணவில பகுதியில் அமைக்கப்பட்டு வரும் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலி நிலையத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து - அப்பகுதியில் வாழும் கத்தோலிக்க மக்களும் குருவானவர்களும் கண்டன அறிக்கையொன்றை ஜனவரியில் கொழும்பு வரவுள்ள பாப்பரசரிடம் கையளிக்கவுள்ளனர்.

இவ்வானொலி நிலையத்தை நிறுவுவதற்கான தங்கள் எதிர்ப்பை பாப்பரசரின் ஊடாகஅமெரிக்க ஜனாதிபதி பில்கிளிண்டனிடம் தெரிவிக்க விருப்பதாகவும் உலகளாவியரீதியில்கத்தோலிக்க அமைப்புக்களையும் இரணவில வொய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலி நிலைய அமைப்பதற்கான எதிர்ப்பு போராட்டத்திற்கு உதவி செய்ய கோரவிருப்பதாகவும் அறிக்கையை தயாரித்துவரும் கத்தோலிக்க மதகுருமார் தெரித்துள்ளனர்

இரணவிலவில் மேற்படி நிலையத்தை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சில தினங்களுக்கு முன் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதராலயத்தின் முன்பாக இரணவில மக்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# பௌத்தம் பற்றி பாப்பரசர் கூறிய கருத்துக்கள் முற்றிலும் தவறானவை

## கத்தோலிக்க மதகுரு தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த மதம் தொடர்பாக பாப்பரசர் தனது புத்தகத்தில் தெரிவித்துள்ள கருத்துக்கள் முற்றிலும் உண்மைக்கு மாறானவை. இவ்வாறு அவர் தனது புத்தகத்தில் தெரிவித்துள்ள கருத்துக்களுக்காக பௌத்த மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இவ்வாறு கத்தோலிக்க மத குருவான வண. பிதா.அலோ பீரிஸ் தெரிவித்துள்ளார்

இவர் சிறிலங்கா பௌத்த-பாளி பல்கலைக்கழகத்தில், பௌத்த மாணவர்களுக்கு கத்தோலிக்க நாகரிகம் கற்பிக்கும் விரிவுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

வண. பிதா. அமலா பீரிஸ் மேலும் தெரிவிக்கையில்,

பாப்பரசர் பௌத்த மதம் தொடர்பக எழுதிய கருத்துக்களுக்காக பௌத்தர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது நியா

[6ஆம் பக்கம் பார்க்க]

# கைவிட அரசு மறுப்பு

(கொழும்பு)

வவுனியா மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதியில் வவுனியா விமானத்தள ஓடு பாதையை விஸ்தரிக்க வென சுவிகரிக்கப்பட்ட சில காணிகளை பாதுகாப்புக் காரணங்களுக்காக திருப்பி வழங்க முடியாது என அமைச்சர்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஏ. டப்ளியூ. கே. சாந்தகா கிழக்குப் பிராந்திய பதில் கொமாண்டராக நியமிக்கப்பட்டுள்ளார்

தற்போதைய கிழக்குப் பிராந்திய கொமாண்டர் ரியர் அட்மிரல் ரி. கே. தசநாயக்கா புதுடில்லி தேசிய பாதுகாப்பு கல்லூரிக்கு செல் பதவியேற்கின்றார்.

தற்போதைய தனிநபர் பயிற்சி இயக்குனர் கொமாண்டர் எச். டி. டொமஸ்ரிக்கா மேற்குப் பிராந்திய கொமாண்டராக பதவி ஏற்கின்றார்

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஏனைய தமிழ்க் குழுக்களுடனும் இனப்பிரச்சினை குறித்து பேசப்படும்

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

'' வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்னுரிமை கொடுத்துள்ளது. ஆயினும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் உட்பட அனைத்து அரசியற் கட்சிகளுடனும் தீர்வு தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தப்படும்'' என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்பதில் அரசு கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று முன்தினம் ஈ. பி டி. பி. குழுவினரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ஜனாதிபதி அலுவலகத்தில், ஈ.பி.டி.பி. குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன், ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்ட இச்சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்றது.

# பேச்சு நடத்தாது செய்யும் வேலை நிறுத்தம் சதியே

## அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த 17 வருடகாலமாக தமது உரிமைகளை கேட்டு போராடமுடியாமல் தொழிலாளர்களும் அரச ஊழியர்களும் வாயடைத்து நின்றனர். இன்றைய அரசில் உரிமைகேட்டு வேலை நிறுத்தங்கள் நடக்கிறது. ஆனால் வேலை நிறுத்தத்தில் இறங்க முன் அவர்கள் தம் கோரிக்கைகளை அரசுக்கு முன் வைக்கவேண்டும். அரசுடன் பேசாது திடீரென வேலை நிறுத்தத்தில் இறக்குவது நாசகார வேலையே என்று கருத முடியும் என தொழில் பயிற்சி அமைச்சர் மகிந்தராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இன்று பத்திரிகைகளைப் புரட்டினால் வேலை நிறுத்தங்களுக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. ஆனால் வை வேலை நிறுத்தமல்ல என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# அதிகாரிகளைதடுத்துவைத்த ஆறு பணியாளர் கைது

(கொழும்பு)

ராஜகிரியாவிலுள்ள பிரிமா நிறுவனத்தின் இருஉயரதிகாரிகளை ஆறாவது மாடியின் கூரையில் பணயம் வைத்தமைக்காக அங்கு வேலை செய்யும் ஆறு பணியாளர்களை சி ஐ.டி. பொலிசார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக இந்நிறுவனத்தின் வேறு இரு உயரதிகாரிகளும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை மேற்படி பணயம் வைத்தல் சம்பவத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொறுப்பாக இருந்ததாகவும் இவரின் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதா

(6ஆம் பக்கம் பார்க்க)

# விடைத்தாள் மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியாகிய க.பொ.த (உ.தர) பரீட்சை 1994 ஓகஸ்ட் இன் விடைத்தாள் மீள்பார்வை செய்வதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஜனவரி 9ஆம் திகதி என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே விடைத்தாள்களை மீள்பார்வை செய்ய விரும்பும் பரீட்சார்த்திகளில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் அதிபரூடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாக பரீட்சைத் திணைக்களத்திற்கும் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

[6ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### புலமைப்பரிசில் BRIGHT இன் புத்தகங்கள்

புலமைப்பரிசில் 5-ம்ஆண்டு கணிதம் ரூபா 60, தமிழ் ரூபா 50, கட்டுரை மஞ்சரி ரூபா 50. கிடைக்கும் இடங்கள்: பூபால சிங்கம் புத்தகசாலை, தனலட்சுமி புத்தகசாலை, நாயக பாலன் புத்தகசாலை சிவம் மெடிக்கல் புத்தகசாலை, மொடேன் புத்தகசாலை, கமலா புத்தகசாலை, ஆசிர்வாதம் புத்தகசாலை.

(10378)

### தேவை

26'' அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்பிலுள்ள சொனி / நாஷனல் கலர் ரீ. வீ. தேவை. கீழ்க் கண்ட முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். உரிமையாளர், லிபேட்டி சினிமா அச்சுவேலி, (10421)

### உடன் விற்பனைக்குண்டு

டச் வீதி, சித்தங்கேணியில் வீடு கட்டக் கூடிய 4பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு;- இ. கந்தசாமி, டச் றோட், சித்தங்கேணி.

(10387)

### A/L இரசாயனம்

Day Class வகுப்பு ஆரம்பம் 19.12.94 திங்கள் 8.15 காலை. ஆசிரியர்: சத்தீஸ் 108 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

[10409]

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சிவன்கோவில் வீதியில் உப அஞ்சல் அலுவலகம் முன்பாக இரண்டு வீடுகளுடன் நான்கு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:-பிரபா ஜெனரேட்டர், ஒழுங்கை சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி.

(10425)

### நத்தார் பெருநாள் பரிசு

மில்க்வைற் சலவைத்தூள் பாவனையாளர்கட்கு இரட்டிப்பு இனிய செய்தி450 கிறாம் சலவைத்தூள் பக்கற் விலை ரூபா 45/- ஆகக் குறைப்பு. 450 கிறாம் வெற்றுப் பக்கற் ஒன்றுக்கு இருப்புள்ள வரை வழிபாட்டுக்குரிய கிறிஸ்தவ வண்ணப்படம் அன்பளிப்பு.

''மில்க்வைற்'' (சி-10926)

### கடைகள் திறந்திருக்கும்

(தொல்புரம்)

எதிர்வரும் நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமையும் 24ஆம் திகதி, 31 ஆம் திகதி சனிக்கிழமை முழு நாளும் யாழ் மாவட்டத்திலுள்ள சகல வணிக நிலையங்களும் வியாபாரத்திற்காக திறந்திருக்கலாம் என யாழ் மாவட்ட வணிகர் கழகங்களின் இணையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

### பயிற்சி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க. பொ. த (உ/த) வகுப்புக்களில் இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் 19, 20, 21 -ம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் வலயம் இரண்டைச் சேர்ந்த சகல இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயம் இரண்டின் விஞ்ஞானக் கல்வி அதிகாரி கேட்டுள்ளார்.

## புதிய கல்வியாண்டு வகுப்புக்கள்

**A/L 95 பகல் நேர மீட்டல் வகுப்பு**

**ஆரம்பம்: 19 - 12 - 94 (திங்கள்) மாலை 3.00**

**எமது A/L திறமையான ஆசிரியர் குழு**

| | | |
|---|---|---|
| கணக்கியல் | :- | அருளானந்தம் |
| வர்த்தகம் | ;- | கிருஷ்ணா |
| தமிழ் | :- | கணேசலிங்கம் / கமலரூபன் |
| அளவையியல் | :- | சத்தியசீலன் |
| இந்து நாகரிகம் | :- | விஜயகுமார் |
| இந்து சமயம் | :- | பிரபல ஆசிரியர் |

★ ஆண்டு 3-11 வரையான வகுப்புக்கள் 5-12-94 முதல் நடைபெறுகின்றன.

குறிப்பு:- எமது நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி கற்கும் ஆற்றலின் வளர்ச்சி பற்றிய பெற்றோர் — ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் 28-12-94 புதன் மாலை 3.00 மணிக்கு நடைபெறும். அனைத்து மாணவர்களின் பெற்றோர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## நெப்ரியூன்ஸ்

கல்வி நிறுவனம்,

## கடன்கொடுத்தோருக்கான பணக்கொடுப்பனவு

விளக்குவைத்தகுளம் பாண்டியன் கொள்வனவு மையத்தினருக்கு பொருள்கள் கடனுக்கு விற்பனை செய்தவர்களுக்கான பணக் கொடுப்பனவுகள் எதிர் வரும் 20.12.94 தொடக்கம் 24.12.94 வரை வழங்கப்படவுள்ளது.

கடன் கொடுத்தவர்கள் அனைவரும் விளக்க ஆவணங்களுடன் குறிப்பிடப்பட்ட நாள்களில் காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கருகில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு வருகை தந்து பணத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பாண்டியன் பல்பொருள் வாணிபம்
(சி-10919) நடுவப்பணியகம்

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

18.12.94



## செல்வன் ஷயந்தன்

மூளாய் வேரத்தைச் சேர்ந்த முத்துராஜா-மங்களேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஷயந்தன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று 18-12-94 ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் அமைதியாக கொண்டாடுகின்றார். ஷயந்தனை அப்பா, அம்மா, தங்கை, அப்பப்பாமார், அம்மம்மாமார், மாமன்மார், மாமிமார், சித்திமார் பீட்டிமார், (கொடிகாமத்தில் வசிக்கும் அம்மம்மாவின் சக குடும்பத்தினர்) அப்பாவின் சகஊழியர்கள், மாமாவின் சக ஊழியர்கள் மற்றும் நண்பர்கள், உறவினர்கள் மூளாய் பிள்ளையாரின் அருள் பெற்று பல்கலையும் பயின்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-
இ. தவசீலன்
(மாமா)
(சி-10931) ஈழநாதம் ஊழியர்

## நினைவு கூருகின்றோம்...

### 18.12.1994

1984 ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை - புல்மோட்டை, சிறிபுரச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினரின் வாகனம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். ஐங்கரன்** (சுப்பிரமணியம் நற்குணம்-திரியாய் -திருமலை)

**லெப். கடாபி** (வேலுப்பிள்ளை கிருஷ்ணானந்தன்-இணைப்பாலை-புதுக்குடியிருப்பு)

மன்னார்-பரப்புக்கடந்தான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் முற்றுகையில் விழுப்புண்ணடைந்த நிலையில் தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய,

**லெப். நிதி** (கிறிஸ்துநாதன் சுதாகர் -பனங்கட்டிக் கொட்டு - மன்னார்)

1986 -ம் ஆண்டு மட்டு - தாண்டியடிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**லெப். கமலன்** (சிவசுந்தரம் இராசநாயகம் -கல்முனை - 02 - அம்பாறை)

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ரவிக்குமார்** (மயில்வாகனம் புண்ணியமூர்த்தி - தம்பிலுவில் - 01 - அம்பாறை)

1987-ம் ஆண்டு கட்டுவன் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**பன்னீர்** (நாகலிங்கம் பன்னீர்ச்செல்வன் ஏழாலை தெற்கு - சுன்னாகம் - யாழ்)

மந்துவில் பகுதியில் எமது முகாமை இந்தியப் படையினர் சுற்றிவளைத்த போது வீரச்சாவெய்திய,

**கணேஸ்** (- - - - -)

கோண்டாவில் - காரைக்கால் பகுதியில் இந்தியப் படையினர் சுற்றிவளைத்த போது வீரச்சாவெய்திய,

**தனுஸ்** (வைத்திலிங்கம் வசீகரன் - நீலாவத்தை தெல்லிப்பழை - யாழ்)

ஆனைக்கோட்டை -கூழாவடிப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய-

**ஜெராட்** (- - கண்டி)

**ரவி** (பிரகாஸ் ரவிக்குமார் - கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி - யாழ்)

1990ஆம் ஆண்டு மட்டு - பட்டிருப்புப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட பொறிவெடி விபத்தில் எமைப் பிரிந்த-

**2-ம் லெப். வோல்டர்** (கந்தசாமி சிவப்பிரகாசம்-குருக்கள்மடம் - மட்டு)

1991ஆம் ஆண்டு வவுனியா - பேயாடி கூழாங்குளம் பகுதியிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப் தம்பித்துரை** (சின்னத்துரை நற்குணராசா கூழாங்குளம் -வவுனியா)

**குஞ்சன்** (சின்னராசா அருந்தவராசா கூழாங்குளம் வவுனியா)

1992ஆம் ஆண்டு தொண்டமானாறு-அச்சுவேலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது பலியான நாட்டுப்பற்றாளர்

**சின்னத்தம்பி** (சர்வானந்தம் பவானந்தராசா வளலாய் - அச்சுவேலி)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்,

# நெப்ரியூன்ஸ்

கல்வி நிறுவனம்,

நெல்லியடி.

(சி-10933)



யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் - 1995

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட இறைச்சிக் கடைகள், கோழிக் கடை, கருவாட்டுக் கடைகளை 01 - 01 - 1995 முதல் குத்தகையில் கொடுப்பதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவங்களை மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா 100/- உம் மீளப் பெறக்கூடிய கேள்வி வைப்புப் பணம் ரூபா 2500/- உம் செலுத்தி 22- 12- 94 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3. 00மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விகள் 23- 12- 94 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12. 00 மணிக்கு முன் யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்களுக்கு 09- 11- 94 ஆம் திகதிய இதே பத்திரிகை விளம்பரத்தைப் பார்க்கவும். மேலதிக விபரங்களை யாழ். மாநகர சபையின் நானாவித இறை வரிப் பகுதியில் அறிந்து கொள்ளலாம்.

### அட்டவணை - 1 (மீளக் கேள்வி கோரப்படுபவை)

| | இறைச்சிக் கடைகள் | குத்தகை காலம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 01. | குருநகர் ஆட்டிறைச்சிக்கடைஇல.7 | 1 வருடம் | 14, 315.00 | 195.00 |
| 02. | பாஷையூர் மாட்டிறைச்சிக்கடைஇல.1 | 1 வருடம் | 51, 000.00 | 135.00 |
| 03. | பாஷையூர் மாட்டிறைச்சிக்கடைஇல 3 | 1 வருடம் | 50, 000.00 | 135.00 |
| 04. | நரிக்குண்டு மாட்டிறைச்சிக்கடை | 1 வருடம் | 63, 000. 00 | 135.00 |
| 05. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடைஇல.1 | 1 வருடம் | 20, 000.00 | 112,50 |
| 06. | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | 1 வருடம் | 26, 000.00 | 200.00 |
| 07. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல.7 | 1 வருடம் | 5, 150.00 | 200.00 |
| 08. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை இல.8 | 1 வருடம் | 4, 175.00 | 200.00 |
| 09. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை இல.9 | 1 வருடம் | 5,300.00 | 200.00 |
| 10. | கொட்டடி ஆட்டிறைச்சிக்கடைஇல.5 | 1 வருடம் | 16,000.00 | 112.50 |

### அட்டவணை - 11 [புதிதாகக் கேள்வி கோரப்படுபவை]

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | நாவாந்துறை கருவாட்டுக்கடை இல. 11,12,13 | 5 வருடம் | 10,000 | 200. 00 |
| 02. | நாவாந்துறை கோழிக்கடை இல.10 | 1 வருடம் | 5,000 | 200, 00 |

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
17 - 12 - 1994

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

[சி-10934]



# A/L 95

## கணித - உயிரியல் பிரிவு

பகல் முழுநேர - மாலை நேர
மீட்டல் வகுப்புகள்

## ஆரம்பம்: 23-12-94

| | | |
|---|---|---|
| இரசாயனவியல் | : | திரு செல்வா |
| பௌதிகவியல் | : | திரு. ஞானி |
| | | திரு. வர்ணம் |
| | | திரு. ரவீந்திரநாதன் |
| தூய/பிரயோக | ( | திரு. குணம் |
| கணிதம் | ( | திரு. கிருஷ்ணா |
| தாவரவியல் | : | திரு. ஐங்கரநேசன் |
| விலங்கியல் | : | திரு. கெங்காதரன் |

- முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்
- பாடசாலை செல்லாதவர்கள் மாத்திரமே பகல் முழுநேர வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்.
- 22-12-94 அன்று மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.
- நேர்சூசிகையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்
- 94இல் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி-10935)


வளலாய் - அச்சுவேலி)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி 10930)

# பகிரங்க அழைப்பாணை

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம்,

சுன்னாகம்.

கனகரட்ணம் சிவம்
தில்லைகட்டி ஒழுங்கை,
சுன்னாகம்.
வழக்காளி

இல காணி 179/94

எதிராக

1. **இராமநாதன் சிவானந்தன்**
   புன்னாலைக்கட்டுவன்.
2. **திருமதி சிவபூரணம். சிவஞானசுந்தரம்**
   சுன்னாகம்.
3. **திருநாவுக்கரசு நாதன்**
   தோப்புவளவு, சுன்னாகம்.
4. **திருநாவுக்கரசு திருமகள்**
   சுன்னாகம், தற்போது கொழும்பு.
5. **தம்பு பார்வதி**
   தோப்புவளவு, சுன்னாகம்.

எதிராளிகள்.

மேற்படி வழக்கின் 4-ம் எதிராளி திருநாவுக்கரசு திருமகள் தோப்புவளவு, சுன்னாகம் தற்போது கொழும்பு. சுன்னாகம் இறையிலுள்ள வாரிக்கலட்டியின் கிணற்றடியும், நிலப்பரப்பு 10-ம் வீடும்,கிணறும்; கிணற்றில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு 7 சம்பந்தமாக ஒரு வழக்கை இவ் வழக்காளி தாக்கல் செய்து தனக்குரிய நிலப்பரப்பு 7ஐ நில அளவையாளர் ஒருவர் மூலம் குறியீடு செய்து அரைவாசி வீட்டையும், கிணற்றையும் குறித்த கிணற்றில் எதிராளிக்குரிய பங்கு புறநீங்கலாக ஆட்சி செய்ய உரிமைக் கோரிக்கை, நிவாரணம் என்பன கேட்டுள்ளார்.

குறித்த நிவாரணம் சம்பந்தமாக 4-ம் எதிராளியாகிய நீவிர் உமது உரிமைக்கோரிக்கையை இந்நீதிமன்றத்துக்கு 29-12-94 காலை 9.00 மணிக்கு சமுகம் செய்து அணைக்கும்படி இதனால் வேண்டப்படுகிறீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
பதிவாளர்.

(10400)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## ( 19 வயதிற்குக் கீழ்ப்பட்டோர் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி )

# "பிற்பகுதியில் கொக்குவில் இ. அணி எமக்கு அழுத்தம் கொடுத்து ஆடினர்"

## - ஹென்றியரசர் அணியினர்

பாடசாலை மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் 1-ம் பிரிவு அணியினர் வெற்றிக் கிண்ணம் பெறுவது என்பது அபரிமிதமான மகிழ்ச்சிக்குரியதொன்றுதான். ஆனால் புனித ஹென்றியரசர் அணியினருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஏனெனில் 3 வருடங்கள் தொடர்ந்து சாம்பியன் பட்டம் வென்று மேஜர் முரளி வெற்றிக் கிண்ணத்தையே இவ்வருடம் கையகப்படுத்திக் கொண்டார்கள்.

மானிப்பாயில் இயங்கும் புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு நாம் சென்ற போது இந்த மகிழ்ச்சியை எல்லோரிடமும் காண முடிந்தது. மேலும் நாம் எதனைக் கேட்கப்போகிறோம் என்பதை நன்கறிந்து பளிச்பளிச் சென்று பதில் கூறிக் கொண்டு சென்றார் சுபாஸ்கரன். ஏனையோர் அவருக்கு பொருத்தமான உதவிகளைச் செய்து கொண்டிருந்தனர். களத்திலும் இந்தத் திட்டமிடலும்ஒழுங்கமைப்பும் அவர்களுக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்திருக்கிறது.

சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் அடங்கும் இக்கல்லூரியினர் மானிப்பாய் இந்துவுடன் மீள நடைபெற்ற ஆட்டத்தில் 3-1 என்று வென்று பின்னர் மெமோறியல் கல்லூரியையும் வென்று மாவட்ட நிலைக்கு வந்திருக்கிறார்கள். மாவட்ட மட்டம் லீக் முறையில் 1 குழுவில் 3 அணிகள் என்றவாறு அமைகிறது. தம் குழுவில் வந்த கரவெட்டி விக்னேஸ்வராவுடன் 1-1 என்று சமன் செய்து ஸ்கந்தாவை 2-0 என்று வென்றுள்ளார்கள்.

**நிர்மலன்**

இந்நிலையில் புனித ஹென்றியரசர் கல்லூரியினரும், ஸ்கந்தா அணியினரும் விலகல்முறை ஆட்ட நிலைக்கு வருகிறார்கள் இந் நிலையில் மொத்தம் 16 அணிகள் தகுதி பெறுகின்றன. இவர்கள் தம் முதலாட்டத்தில் கனகரத்தினம் ம. மகாவித்தியாலயத்துடன் 1-1 என்று சமன்செய்து பெனால்டியில் 3-2 என வெல்கின்றனர். அடுத்தஆட்டம் கால் இறுதியாட்டமாக அமைகின்றது. இவ்வாட்டத்தில் புனித சார்ள்ஸ் வித்தியாலயத்தை 3-0 என்றுவென்று அரை இறுதியாட்டத்தில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்கொள்கிறார்கள் தாங்கள் 2-1 என்று வென்றமையைக் கூறும் இவர்கள் இவ்வளவையும் கச்சிதமாகச் சுருக்கமாகக் கூறி முடித்தார்கள்.

இறுதியாட்டம் பற்றிய உங்கள் உணர்வலைகள் என்ன என்றோம் சிறிது ஆழமாகக் கதைத்துப் பார்ப்போமென்று. எங்கள் ஒவ்வொரு நிலை வீரனும் அபாரம் என்கிறார் சுபாஸ்கரன். முதல் அரைப் பகுதியாட்டம் அதனை உங்களுக்குச் சரியாகத் தெரிவித்திருக்குமே என்று எம்மையும் சாட்சிக்கழைக்கிறார். ''அது சரி 2-வது அரைப் பகுதியில் நீங்கள் நினைத்தபடி களத்தினை ஆக்கிரமிக்க கொக்குவில் இந்து விடவில்லையே என்ன கூறுகிறீர்கள்? என்றோம். உண்மைதான் அவர்கள் தங்கள் வியூக முறைகளை மாற்றிக் கொண்டார்கள். எங்களுக்கு அழுத்தம் தந்தார்கள் என்பது உண்மை. குறிப்பாக வீரர் பாபு என்று மிகவும் மனந்திறந்து கூறுகின்றார்கள். முதல் அரைப்பகுதியில் அவர்களின் காப்பரண்களை ஊடறுத்து நாங்கள் இரண்டு கோல்களைப் போட்டோம். ஆனால் 2-வது அரைப்பகுதியில் அவர்களின் முன்வரிசை எமக்கு ஓய்வில்லாத அழுத்தம் தந்தனர் என்று தொடர்கிறார்கள்.

''முதலாம் பிரிவு ஆட்டங்கள் ஓரளவில் உயர்தரத்தைக் கொண்டமைவது. இவ்வகையில் உங்களுக்கு சவாலாக அமைந்த ஆட்டங்கள் எவை என்று கூறுவீர்களா? என்றோம் முதலாவதும் முதன்மையானதும் கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம். அற்புதமான முன்னணி வீரர்களைக் கொண்ட அணி அது. அடுத்து ஹாட்லிக் கல்லூரி. எல்லாவகையிலும் சமநிலை

(4ஆம் பக்கம் பார்க்க)



94- 19 வயதின் கீழ்
புனித ஹென்றியரசர்

- கோல்காப்பு -

க. சுபாஸ்கரன். (உ. தலைவர்)
இ ஜீவகுமார்.

- பின்காப்பு -

தி. எட்வின் கொலின்.
ச. ஜோர்ட்ஸ். பாஸ்கரன்.
ப. அன்ரன். ஜோர்ஜ்.
து. கேசவன்.

- மத்திய வரிசை -

வ. கமலதாஸ்.
த. வித்தியாதரன்
ந. லோகலிங்கன்.
லி. ஜீன் கெனரி.

- முன்வரிசை -

மு. எமில் ரூபன் (அணித்தலைவர்)
ச. கோல்டன்ராசா.
ஜே. கமலநாதன்.
சி. சாம் நெவில்.
பி. நீல் பிறைனர்.
அ. அஜித் கியூமன்.

# 3-வது தடவையாக வெற்றிக்கிண்ணம் சுவீகரித்த ஹென்றியரசர் கல்லூரி

யாழ் மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட 19 வயதிற்கு உட்பட்டோர்க்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் கடந்த மாதம் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் இடம்பெற்ற மூன்றாம் இடத்தைத் தெரிவதற்கான போட்டியில் நாவாந்துறை றோ. க. வித்தியாலயத்தை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இவ்வாட்டத்தில் ஆரம்பத்திலேயே நாவாந்துறை றோ க. அணியினர் எதிர் அணியினருக்கு அதிக அழுத்தம் கொடுத்து ஆடத் தொடங்கினர். இருந்தபோதும் ஹாட்லிக் கல்லூரி அணியினர் தாமும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்து எதிர் அணியினரின் வேகத்திற்கு ஈடு கொடுத்து ஆடிக்கொண்டிருந்தனர்.

குறிப்பாக முதல் பாதி ஆட்டம் முடிவடையும்போது நாவாந்துறை றோ க.அணியினர் கோல் போட எடுத்த முயற்சிகள் அனைத்தையும் ஹாட்லிக் கல்லூரி பிற்காப்பு வீரர்களும், பந்து காப்பாளரும் சாதுரியமாக முறியடித்தனர்.

இடைவேளையின் பின் மீண்டும் ஆட்டம் ஆரம்பித்த போது இரு அணியினரும் வேகமாக ஆடத் தொடங்கினர். ஆட்டம் ஆரம்பித்து சொற்ப நேரத்தில் நாவாந்துறை றோ. க. வித்தியாலய இடதுபக்க முன்வரிசை வீரர் ஜெகன் தனது அணிக்காக முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

இதன் பின் ஹாட்லிக் கல்லூரி பின்காப்பு வீரர் கோல் பரப்பினில் வைத்து முறை தவறி விளையாடியமைக்காக அவர்களுக்கு எதிராக ஒரு பனால்டி உதை எதிரணியினருக்கு வழங்கப்பட்டது. இச் சந்தர்ப்பத்தை அணித் தலைவர் எமில் பிரபாகரன் சாதுரியமாக அடித்து கோலாக்கினார். தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரி அணியினர் பெரும் முயற்சி எடுத்தும் கோல் எதனையும் பெற முடியவில்லை. 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் நாவாந்துறை றோ. க. வித்தியாலய அணியினர் முன்னணி வகித்து 3-ம் இடத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.

இவ்வாட்டத்திற்கு பிரதம மத்தியஸ்தராக திரு. கிருபாகரனும் உதவி மத்தியஸ்தராக திருவாளர்கள் முருகவேலும், வைத்தீஸ்வரனும் கடமையாற்றினார்கள்.

தொடர்ந்து இடம்பெற்ற 1-ம் இடத்தை தெரிவதற்கான ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்து 10ஆவது நிமிடத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு கிடைத்த நேர் உதை ஒன்றை அணித் தலைவர் எமில் ரூபன் கோலாக மாற்றினார்.



19 வயதிற்குக் கீழ்ப்பட்ட புனித ஹென்றியரசர் அணி

(4ஆம் பக்கம் பார்க்க)

''நான் எதிர்பார்த்ததிற்கு மாறாக புனித ஹென்றியர

# "நீண்ட இடைவெளியின் பின்னர்

நிலையில் ஒரு மந்தகதி இருந்ததாயினும், பின்னர் போட்

# "நீண்ட இடைவெளியின் பின்னர் இறுதிப்போட்டியில் பங்குகொண்டோம்"

## - கொக்குவில் இந்து அணியினர்

''நான் எதிர்பார்த்ததிற்கு மாறாக புனித ஹென்றியரசர் அணியின் பயிற்றுனர் வியூகத்தை மாற்றியமைத்துவிட்டார். இந்நிகழ்வே முதல்15 நிமிடத்தில் அவர்களுக்கு இரண்டு கோல்கள் பெற வாய்ப்பாக அமைந்ததும் முதல் அரைப்பகுதி ஆட்டம் எம் சார்பில் சோபிக்காமல் போனதற்கும் காரணம்.

இடைவேளையின் பின் எனது அணியின் நிலைகளில் ஒருசில மாற்றம் செய்ததுடன் சிலவிடயங்களை அறிவுறுத்தினேன். வெற்றிபெறாவிடினும் இதன்பின் இறுதிவரை எனது வீரர்கள் மிகத்திறமையாக விளையாடினார்கள்''

19 வயதிற்குட்பட்டோருக்கான பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்றகொக்குவில் இந்துக் கல்லூரிஅணியை சந்திக்கும் முகமாக கல்லூரிக்கு சென்றிருந்த போது இக்கல்லூரி அணிக்கு பயிற்றுனராக இருக்கும் தனராஜரட்ணம் (ரவி) இக்கருத்தைக் கூறினார்.

மேலும் எங்களுடன் கூட அணித்தலைவர் பாபுவும் இன்னும் பார்த்தீபன், சசிகரன் உட்பட சில வீரர்கள் இருந்தனர்.

அவர்கள் தொடர்ந்து உரையாடிய போது நாங்கள் நல்லூர்க்கோட்டத்தில் 2போட்டிகளில் கலந்துகொண்டோம். ஒருபோட்டியில் வெற்றியும் மறுபோட்டியில் சமனாகி முன்னணி வகித்தோம்

அடுத்ததாக மாவட்ட மட்டப் போட்டியில் மொத்தம் 24 அணிகள் பங்குபற்றின. இதில் எமது பிரிவில் மானிப்பாய் இந்துவுடனான ஆட்டத்தில் தோல்வியை சந்தித்தோம். அடுத்து உரும்பிராய் இந்துவுடனான ஆட்டத்தில் உரும்பிராய் இந்துஅணி விலகிச் செல்ல மானிப்பாய் இந்துவும் நாங்களும் அடுத்தகட்டப் போட்டிக்குத் தெரிவானோம். அடுத்தகட்டப் போட்டிகள் யாவும் விலகல்முறையிலேஅமைந்தன. இப்போட்டியில்ஸ்ரீமுருகன் வித்தியாலயம் 3-0 என்ற வகையில் வெற்றிகொண்டு கால் இறுதிப் போட்டியில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானோம். அரை இறுதிப் போட்டியில் நாவாந்துறை றோ. க. வித்தியாலயத்தை 2-1 என்ற கோல் வித்தியாசத்தில் வென்று இறுதிப்போட்டிக்கு தெரிவானோம் என்றார்.

**எஸ். தயாபரன்**

நீங்கள் சந்தித்த போட்டிகளில் சிறந்த போட்டியாக எதனைக் கருதுகிறீர்கள் என வினவியபோது, 'நாங்கள் சந்தித்த போட்டிகளில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துடனான ஆட்டம்ஒருசிறந்த ஆட்டமாகும். இவ்வணி வீரர்கள் எல்லோருமே நன்றாக விளையாடக்கூடியவர்கள்குறிப்பாக பார்த்தீபன்,லக்கி ஆகியோர் நன்றாகவே செய்தனர்.

அடுத்ததாக நாவாந்துறை றோ. க. வித்தியாலயத்துடனான ஆட்டமும் நல்லதொரு ஆட்டம். சிறந்த முன்வரிசை வீரர்கள் கொண்ட ஒருஅணி. எமில் பிரபாகரன், புரூஸ்லீ இருவரும் மிகவும் வீச்சுடன் செயற்பட்டனர்.

இறுதியாட்டம் பற்றி வினவியபோது, உண்மையில் முதல் அரைப்பாதி ஆட்டம் எம்மைப் பொறுத்த வரை சோபிக்கவில்லைதான். இடைவேளையின் போது எமது பயிற்றுனர் சில வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தினார். எமது நிலையில் சிறிது மாற்றம் செய்து கடுமையாக பேராடினோம் நாங்கள் கோல்போட எடுத்த முயற்சிகளை அவர்களின் பந்து காப்பாளர் சாதுரியமாக தடுத்துவிட்டார். பொதுவாக நாங்கள் 11 பேரும் கூட்டாக இணைந்து சிறப்பாக செய்தோம். வெற்றி தோல்விக்கப்பால் நல்லதொரு ஆட்டம் விளையாடிய திருப்தி எமக்கிருந்தது.

மேலும் அவர்கள் தெரிவிக்கையில் 1975-ம் ஆண்டு சம்பியன் பட்டத்தை பெற்ற நாம் ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின் 1986-ம் ஆண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவானோம்துரதிர்ஷ்டவசமாக அவ்வாட்டம் நடைபெறவில்லை. மீண்டும் இவ்வருடம் இறுதிப் போட்டிகளில் பங்குபற்றி இரண்டாம் இடத்தை பெற்றிருக்கிறோம்.

இந்த முன்னேற்றகரமான வளர்ச்சியின் பின்னணியில் எமது அதிபர், ஆசிரியர்கள், கல்லூரி பழைய மாணவர்கள் ஒத்துழைப்பு தந்து எம்மை ஊக்குவித்திருக்கிறர்கள். குறிப்பாக எமது பயிற்றுனர் ரவி அண்ணாவை அறிமுகம் செய்தவர்கள் கல்லூரி பழைய மாணவர்களே. ரவி அண்ணா குறுகிய காலப் பகுதியில் எமக்கு சகலவிதமான பயிற்சிகளையும் தந்து எம்மை இறுதிப் போட்டிக்கு தகுதிபெறும் அளவிற்கு வளர்த்துள்ளார். ரவி அண்ணா பயிற்சி நேரம் கடுமையானவர். பயிற்சி முடிந்து வெளியில் வரும் போது சிரித்துப் பேசி அன்பாக நடப்பார் என்றனர்.

அருகில் இருந்த பயிற்றுனர் ரவி தொடர்ந்து பேசிய போது, நான் பயிற்சி ஆரம்பித்த போது வீரர்களின் மன நிலையில் ஒரு மந்தகதி இருந்ததாயினும், பின்னர் போட்டிகளில் கலந்து கொண்டு ஒரு உன்னத இடத்தை பெற வேண்டும் என்ற உத்வேகம் அவர்களுக்குபிறந்து விட்டது.

அவர்கள் மனஉறுதியும் பயிற்சியும் சேர்ந்து இவ்வெற்றியைதந்தது. அதிபர்உட்பட கொக்குவில் இந்துக்கல்லூரி சமூகம்எனக்குபூரணஒத்துழைப்பு தந்தது என்றார்.

மேலும்இப்பாடசாலையின் பழைய மாணவன் கோகுலன் அடுத்த வருட 15 வயதிற்

(4ஆம் பக்கம் பார்க்க)



19 வயதிற்குக் கீழ்ப்பட்ட கொக்குவில் இந்து அணி

## அணிவீரர்கள்

**கோல் காப்பாளர்**

த. பார்த்தீபன்

**பின் வரிசை வீரர்கள்**

க. சசிக்குமார்
பா. சசிக்குமார்
தி. கோகுலதாஸ்
சி. ஜெயந்தன்
உ. சுரேந்திரன்

**மத்திய வரிசை வீரர்கள்**

வ. சஞ்சீவன்
செ. தணிகேஸ்வரன் (உதவி தலைவர்)
கு. கேதீஸ்வரன்
த. குணசீலன்
ம. சுதாகரன்
சு. ஹரிஹரதாமோதரன்
யு. ஜேம்ஸ் ரஜீவன்

**முன் வரிசை வீரர்கள்**

வ. பாபு (அணி தலைவர்)
சா. சசிகரன்
சி. அசோகன்
இ. சிவநீதன்
தி. குபேந்திரன்

# பாடசாலை மட்டத்தில் கிளித்தட்டுப் போட்டிகள்

கிளித்தட்டுப் போட்டிகள் தமிழர்களின் ஒரு தேசிய விளையாட்டாக பிரபல்யமாக தமிழீழப் பிரதேசங்களிலும் சிறார் தொடக்கம் முதியோர் வரை விளையாடப்படுகின்றது.

இவ் விளையாட்டு ஆரம்பத்தில் வயல்களில் தட்டுத் தட்டாக நெல் விதைத்து அவற்றின் கதிர்களைக் காப்பதற்காக வரம்புகளில் ஓடி கிளிகளைத் துரத்துவதாக இருந்தது. இந்த நடைமுறை பின்னர் நாளடைவில் இரண்டு அணிகளாக அல்லது குழுக்களாகப் பிரிந்து காப்போராகவும், பூர்வோராகவும் விளையாடப்பட்டது.

இந்த விளையாட்டு ஊருக்கு ஊர் வேறுபட்ட சட்டதிட்டங்களுக்கமைய விளையாடப்பட்டது. இவற்றையெல்லாம் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வலயம் 02 கல்விப்பணிப்பாளர் திரு.க. கந்தசாமியின் அயராத உழைப்பினாலும், யாழ். பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழுவின் முயற்சியினாலும் 'இனிங்ஸ்' முறையில் விளையாடுவதற்கு ஏற்ற புதிய பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டது.

இத்தகைய விளையாட்டுக்களை பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு அறிமுகம் செய்வதற்காக வலயம் 02 உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு. பாலா ஒவ்வொரு கோட்டமட்டத்திலும் சகல பாடசாலை உடற்கல்வி பாடம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்கும் செயலமர்வை நடாத்தினார். இது தொடர்பான சுற்றுப் போட்டியில் கரவெட்டி கோட்டத்தில் முப்பது பாடசாலைகளில் இருந்து 11 வயது 13 வயது ஆண், பெண் பிரிவிலும் சகல பாடசாலைகளும் பங்குகொண்டு 'லீக்' முறையில் உடுப்பிட்டி, கரவெட்டி, நெல்லியடி ஆகிய மூன்று கல்வி இணையங்களாகப் பிரித்து 4-10-94 அன்று உடுப்பிட்டி மகளிர்கல்லூரியிலும்5-10-94 அன்று நெல்லியடி மெ. மி த. க. பாடசாலையிலும் விக்னேஸ்வராக் கல்லூரியிலும் 1-11-94வரைநடைபெற்றது.

புள்ளிகளின் அடிப்படையில் பாடசாலை, உடுப்பிட்டி அ. மி. கல்லூரி ஆகிய பாடசாலைகள் தெரிவாகின.

11 வயது பெண்கள் பிரிவில் ஞானாசாரியார் கல்லூரி, நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், இமையாணன் அ. த க.பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கட்டைவேலி மெ. மி. த. க. பாடசாலை, விக்னேஸ்வராக் கல்லூரி ஆகிய பாடசாலைகர் தெரிவாகியது.

தம்பி வித்தியாலயம் சாம்பியனாகத் தெரிவாகியது.

11 வயது பெண்கள் பிரிவில் இமையாணன் அ. த. க.பாடசாலையை எதிர்த்து விக்னேஸ்வராக் கல்லூரி விளையாடி விக்னேஸ்வராக் கல்லூரி சாம்பியனாகத் தெரிவாகியது.

13 வயது ஆண்கள் பிரிவில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தை எதிர்த்து விக்னேஸ்வராக் கல்லூரி விளையாடி அல்வாய் சின்னத்தம்பி

வலயம் -02 இல், 11, 13 ஆகிய இருவயதுப் பிரிவுகளில் இடம்பெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டிகளில்மூன்றுசம்பியன் பட்டங்களை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் தட்டிச் செல்ல, 11 வயதிற்குக் கீழ் பெண்கள் பட்டத்தை விக்னேஸ்வரா கல்லூரி தட்டிக் கொண்டது.

13 வயது ஆண்கள் பிரிவில் விக்னேஸ்வராக் கல்லூரி உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, நெல்லியடி ம. ம. வித்தியாலயம், இமையாணன் அ. த. க. பாடசாலை, ஞானாசாரியார் கல்லூரி, சின்னத்தம்பி வித்தியாலயம்,

13 வயது பெண்கள் பிரிவில் கம்பர்மலை அ. த. க. பாடசாலை, ஞானாசாரியார் கல்லூரி, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், இமையாணன் அ. த. க. பாடசாலை விக்னேஸ்வராக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் தெரிவாகியது. மேற்குறிப்பிட்ட இப் பாடசாலைகள் அனைத்தும் ''தனிவிலக்கு'' சுற்றுப் போட்டி முறையில் விளையாடி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

வித்தியாலயம் சாம்பியனாக தெரிவாகியது.

13 வயது பெண்கள் பிரிவில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தைஎதிர்த்துகம்பர்மலை அ. த. க. பாடசாலை விளையாடி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் சாம்பியனாகத் தெரிவாகியது.

குறிப்பாகக் கூறும்போது இவ்விளம் சிறார்களின் விளையாட்டு ரசிகர்கள் எல்லோரையும் கவர்ந்ததைக் குறிப்பிட வேண்டும். சிறந்த பல கிளித்தட்டு வீரர்கள் உருவாகப் போகிறார்கள் என்பதை இச்சிறார்களின் விளையாட்டு தெளிவாகக் காட்டி நின்றது. எமது பாரம்பரிய விளையாட்டான கிளித்தட்டு நசிந்து போகாதவண்ணம்

எம். கே. யோகரட்ணம்

இவ்விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் 19-11-94 அன்று பிற்பகல் 1.45 மணிக்கு நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை மைதானத்தில் ஆரம்பமாகிச்

இதனை முன்னெடுத்த ஒவ்வொருவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். எதிர்காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியின் ஒவ்வொரு பாடசாலையிலும் கிளித்தட்டு அணிகள்

## ஹிரோசிமா ஆசிய விளையாட்டுப் போட்டி

# மேசைப்பந்தாட்டத்தில் 5 தங்கம் வென்றும் சீனாவிற்கு மனத்திருப்தி இல்லை

ஹிரோசிமா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் மேசைப்பந்து ரசிகர்கள் எதிர்பார்த்தது என்னவெனில் அதற்கான 7 தங்கப் பதக்கங்களையும் சீனாவே வெல்லும் என்பதாகும். ஆனால் சீனா ஐந்தை மட்டும் வென்றமை அவர்களுக்கெல்லாம் அதிருப்தி. சீனாவின் மேசைப்பந்து மேலாண்மை உலகறிந்த செய்தி ஆசிய நிலையில் அல்ல உலக சாம்பியன்களும் சீனர்களே ஆசியப் போட்டிகளில் சீனர்கள் வென்ற தங்கப்பதக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன; 1. பெண்கள் அணி 2. ஆண்கள் அணி 3. ஒற்றையர் ஆண்கள் 4. இரட்டையர் பெண்கள் 5. இரட்டையர் ஆண் - பெண். இவ்வைந்தும் போனால் மிகுதி இரண்டில் ஒற்றையர் பெண்கள் யப்பானுக்கும் இரட்டையர் ஆண்கள் கொரியாவுக்கும் சென்றன.

ஒற்றையர் பெண்கள் ஆட்டத்தில் யப்பான் பெற்ற தங்கப் பதக்கத்தில் சுவையான கதையொன்றுண்டு. 1987-ல் இந்தியாவில் நடைபெற்ற உலக சாம்பியன் டேபிள் டென்னிஸ் போட்டிகளில் ஹைசெல்கி என்ற சீன வீராங்கனையை இன்னொரு வீராங்கனைக்கு இடம் கொடுக்குமுகமாக விலகிக் கொள்ளும்படி சீனப் பயிற்றுநர் கேட்டார். ஆனால் இம்மங்கை விடாப்பிடியாகநின்று தானே விளையாடித் தங்கப் பதக்கம் வென்றார். ஆனால் ஒழுக்கக்கட்டுப்பாட்டு விதிகளுக்கமைய அவர் 88 ஒலிம்பிக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இதனால் மனமுடைந்தவரான அவர் யப்பான்சென்று குடியேறி தனது விடாமுயற்சியாலும் தீராத பயிற்சியாலும் சவாலாக சீனாவின் தங்கப்பதக்கத்தை டெங்யாப்பிங் இடம் இருந்து 6 வருடங்களின் பின் தட்டிப்பறித்துள்ளார். இறுதியாட்டத்தில் டெங்யாப்பிங்கை சந்திக்க முன் அரைஇறுதி ஆட்டத்திலும் கூட உலகின் 2-ம்இலக்க வீராங்கனை சீனாவைச் சேர்ந்தகுயோகொங்கைத்தோற்கடித்தார். ஒரு நாட்டுக்கே சவால் விட்டு சாதித்து விட்டாரே என்று வியக்கிறார்கள். விமர்சகர்கள். தற்போது இவரின் பெயர் சிறேகொயாமா

பெண்கள் அணி சாம்பியன் போட்டிகளில் கொரியாவையும் யப்பானையும்பின் தள்ளி கொங்கொங் 2-ம் பெற்றமை சிறந்த சாதனை என வர்ணிக்கப்படுகின்றது. தென்கொரியா, சியோல் ஆசியப் போட்டிகளில் இப்பிரிவில் தங்கம் வென்ற நாடு. இம்முறை நான்காவது இடமே பெற்றது ஆனால் இரட்டையர் ஆண்கள் போட்டிகளில் தங்கம், வெள்ளி இரண்டையும் தென் கொரியாவே பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது

ஆசியப்போட்டிகளில்மேசைப்பந்தாட்டத்திலும் கிழக்காசிய நாடுகளே முன்னணிவகிக்கின்றன. வியட்னாம் இந்தோனேசியாஇரண்டும்பங்கு கொண்டோம் என்ற அளவிலேயே நிற்கின்றன

கூடைப்பந்தாட்ட ஆண்கள் போட்டிகளில் சீனா, கொரியா, யப்பான் என்பன முதல்மூன்று இடங்களையும்பெற்றுக்கொள்ளஅதிர்ச்சிதரும்வகையில் பெண்கள் கூடைப்பந்தாட்டப் போட்டிகளில்சீனாவைதென் கொரியாவும்யப்பானும்3ம்இடத்துக்குத் தள்ளி தாம்முறையே முதல் இரண்டு இடத்தையும் பெற்றுக் கொண்டனர். இக் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் மிகவும் கவனத்துக்குரியதாக இருந்தது பெண்கள் ஆட்டங்களே என்பது விமர்சகர்கள் கருத்து. ஏனெனில் தென் கொரியா மிகப் பெரும் வீச்சைக் காட்டியது என்கிறார்கள் தோற்கடிக்கப்படமுடியாத சீனாவை இவர்கள் 103-73 என தோற்கடித்துள்ளனர்.

இன்னொரு ஆட்டம் பற்றியும் குறிப்பிடுகிறார்கள். இதுவே இறுதியாட்டம். தென் கொரியாவுக்கும் யப்பானுக்கும் இடையிலானது. இதன் ஆரம்பத்தில் முதல் 5 நிமிடத்தில் யப்பான் 18-4 என முன்னணியில் நின்றது. இதன் பின் மெதுவாக வேகத்தை அதிகரித்த தென் கொரியா 77-76 என்ற வகையில் தங்கப்பதக்கத்தை வென்றது.

நிர்மலன்

இந்த வகையில் தென் கொரியப் பெண்கள் அணியின் சாதனை மிகப் பெரியது. கூடைப்பந்தாட்ட ஆண்கள் பெண்கள் போட்டிகளிலும் சீனா, யப்பான், தென் கொரியா மூன்றுமே முதல் மூன்று இடங்களையும் தட்டிக்கொண்டதை அவதானிக்கலாம். ஆண்கள் பிரிவில் 9 அணிகளும், பெண்கள் பிரிவில் 6 அணிகளும் கலந்து கொண்டன.

## நீண்ட

குட்பட்ட கிரிக்கெட் அணிக்கு பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார். அவரை அணுகி ஒரு சில வார்த்தைகள் பேசினோம். எமது அதிபர் என்ன உதவி என்றாலும் மறுக்காமல் செய்வார். பயிற்றுனர் ரவி அண்ணா மூன்று மாதத்திற்குள் கடுமையான பயிற்சி அளித்து நல்லதொரு அணியாக வளர்த்துள்ளார். இவரின் வழிகாட்டலை பின்பற்றி வீரர்கள் உன்னத நிலையை பெற்றிருக்கிறார்கள் என்றார்.

இக் கல்லூரி அதிபர் திரு. மகேந்திரன் அவர்களிடம் அணுகி பேச்சுக் கொடுத்த போது எம்மை தனது அலுவலகத்திற்கு அழைத்துச்சென்று நீண்ட நேரம் அன்பாக உரையாடினார்.

அவர் கூறிய கருத்திலிருந்து 70-ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தற்போதைய ஆட்டங்

மற்றும்அனேகமான பெரிய பாடசாலை மாணவர்கள் கிரிக்கெட் விளையாடுவதை கௌரவமாக நினைக்கிறார்கள். மீண்டும்உதைபந்தாட்ட கவர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். இதற்கான வழிவகைகளைக் கண்டறியவேண்டும்.

வருட இறுதி மாதங்களில் போட்டிகள் நடாத்துவதால் மாணவர்களின் பரீட்சைக்காலம், கல்விபாதிக்கப்படுகிறது. பொதுவாக 17 வயதுக்குட்பட்டோருக்கானபிரிவில்விளையாடும் வீரர்களில் அனேகமானோர் க. பொ. த. (சா/த) பரீட்சைஎடுப்பவராக இருப்பார்கள் 90 வீதமானோர் படிக்க என்றுரியூசன் சென்ரர்களில் இருக்கும் போது சில மாணவர்களே பயிற்சிக்கு வருவார்கள். பலர் படிக்க, சிலர் விளையாட, மாணவர்களிடம் மன ரீதியான பாதிப்பு ஏற்படுவது இயல்பு. ரியூசன் இல்லாத

மான ஒரு கட்டுரையாக அமைந்திருக்கும்.

இங்கு இன்னுமொரு சுவையான விடயம் என்னவென்றால் இக் கல்லூரியின் பயிற்றுனர் ரவி அவர்கள் யங் கென்றிசியன்ஸ் வி. க, வின் அணித் தலைவராக உள்ளார். புனித ஹென்றியரசர் கல்லூரியின் பயிற்றுனர், ராஜேஸ்வரன் யங் றோயல் வி. க. வீரராக உள்ளார். இவர்கள் இருவரும் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பொதுச் சந்தை

அராலியில் பொதுச்சந்தை ஒன்றினை ஏற்படுத்துவதற்கு வலிமேற்கு பிரதேசசபையினர் திட்டமிட்டுள்ளனர்.

நீண்டகாலமாக அராலிப் பகுதிக்கு பொதுச்சந்தை ஒன்று இல்லாமல் மக்கள் நெடுந்தூரம் சென்றே நுகர்வுப் பொருட்களை வாங்கிவர வேண்டியுள்ளது.

சந்தை அமைப்பதற்கான இடவசதி கிடைத்ததும் பொதுச்சந்தை ஆரம்பிக்கப்படும் எனவும் தெரியவருகிறது. (41)


1-வது, 3-வது

பிறந்ததின வாழ்த்துக்கள்

18.12.94, 25.12.94



1-11-94வரைநடைபெற்றது.

புள்ளிகளின் அடிப்படையில் 11 வயது ஆண்கள் பிரிவில் கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், அல்வாய் சின்னத்தம்பிவித்தியாலயம், நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை, கட்டைவேலி மெ. மி. த. க. பாடசாலை, மணியகாரன் தோட்டம் அ. த. க. மெ. மி. த. க. பாடசாலை மைதானத்தில் ஆரம்பமாகிச் சிறப்புற நடைபெற்றன.

11 வயது ஆண்கள் பிரிவில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தை எதிர்த்து உடுப்பிட்டி அ. மி. கல்லூரி விளையாடி அல்வாய் சின்னத்

யின் ஒவ்வொரு பாடசாலையிலும் கிளித்தட்டு அணிகள் உருவாக வேண்டும். மாணவ மாணவியர் உற்சாகத்தோடு இவ்விளையாட்டை முன்னெடுத்துச் செல்ல சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் மனம் வைத்து உழைக்க வேண்டும்.

70-ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தற்போதைய ஆட்டங்களில் நுட்பங்கள் குறைவு. பாடசாலை போட்டிகளுக்கு என்று தனித்துவமான பாணி இருக்கிறது. அது இப்போது மிக அரிதாகவே காணப்படுகிறது. இதற்கு அனேகமான பாடசாலைகளுக்கு ஆசிரியப் பயிற்றுனர்கள் இல்லாமையே காரணமாகும். ஆசிரியப் பயிற்றுனருடன் சேர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணி வீரர்களும் ஒத்துழைப்பது சிறப்பாக இருக்கும். இது பொதுவான ஒரு உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

யான பாதிப்பு ஏற்படுவது இயல்பு. ரியூசன் இல்லாத நாட்களில் தான் முழு அணி வீரர்களும் பயிற்சிக்கு வருவார்கள் என்றார்.

இக் கல்லூரி அதிபர் மகேந்திரன் அவர்கள் சிறு வயதிலிருந்து இன்றுவரை உதைபந்தாட்டத்துடன் பல் வேறு நிலைகளிலும் பின்னிப்பிணைந்துள்ள ஒருவர். இவர் உரையாடலின் போது பல கோணங்களில் எமக்கு நிறைய விடயங்களை எடுத்துக்கூறினார். எல்லாவற்றையும் குறிப்பிட முனைந்தால் மிக காத்திர

## பிற்பகுதியில்

பேணும் நல்லதொரு அணி அது. அடுத்து ஸ்கந்தா. இவர்களின் முன் வரிசையும் அபாரமானது'' என்கிறார்கள்.

‘‘நீங்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து தற்காலிக வாழ்வொன்றை துன்பத்துடன் மேற்கொண்டிருக்கிறீர்கள். இந்தச்சாதனைக்குப் பலகாரணங்கள் ஒன்று சேர்ந்திருக்க வேண்டுமே?'' என்று கேட்டபோது தெளிவாக வரிசையாகக் கூறினார்கள். அதிபர் கலாநிதி அருட்திரு. ஜஸ்டின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஊக்குவிப்பு, எமது கல்லூரியின் மரபைப்பேணும் அவா, எமது மதிப்புக்குரிய பயிற்றுனர் திரு. இராஜேஸ்வரன். இவருடன் இணைந்து எமது பழைய மாணவ அண்ணன்மார் மைதானமே இல்லாது தவித்தபோது எமக்கு மருத்துவபீட மைதானத்தை பயன்படுத்த அனுமதிதந்த பணிப்பாளர் திரு. தியாகராசா மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கினர் இவையெல்லாம் சேர்ந்தே இவ்வெற்றியைத் தந்தன.

அதோடு இன்னும் சில விடயங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இம் முறை வென்றால் மூன்றாவது முறை வென்றதாக அமையுமல்லவா? அதோடு ஏகப்பட்ட உதைபந்தாட்ட ரசிகர்கள் எமது வெற்றியை எதிர்பார்த்திருந்தார்கள் என்கிறார்கள் சில வீரர்கள். நாங்கள் சிறப்பாகவே செய்தோம் என்பதற்கு இவற்றைக் கூறலாம். நாம் அடித்த கோல்கள் மொத்தம் 30. ஆனால் எமக்கு எதிராக விழுந்த கோல்கள் 06 மட்டுமே. மு. எமில்ரூபன் மட்டும் 10 கோல்கள் அடித்துள்ளார்.

அணிவீரர்களுடன் நிறையவே பேசினோம். தொடர்ந்து அதிபரிடம் உரையாட எண்ணியபோது அவர் புன்சிரிப்புடன் தம் கல்லூரி ஆசிரியர்கள் பக்கம் நோக்கினார். திருவாளர்கள் சு. லிங்கநாதன், க. குகதாஸ் இருவருடனும் கதை கொடுத்தோம்.

எம்முடன் உபஅதிபர் வண. பிதா. ஜேம்ஸ் சிங்கராசா அடிகளாரும் கலந்து கொண்டார். இவர்கள்மருத்துவ பீட மைதானம் தொடர்பாக நன்றியுடன் பேசுகிறார்கள். தொடர்ந்து ரி.பி.பத்மநாதன் பற்றி தம் நன்றியைத் தெரிவிக்கிறார்கள். தற்போதைய பயிற்றுநர் ராஜேஸ்வரனை அறிமுகப்படுத்தியதே ரி.பி தான் என்கிறார்கள்.

92-ல் கையறு நிலையில் இடம் பெயர்ந்து வந்த சூழ்நிலை. இந் நிலையில் ரி.பி எம்மிடம் உதைபந்தாட்டத்தைத் தொடர்வோம் என்றார் அதற்கு எமது அதிபர் ஒன்றை மட்டும் கூறினார் ‘நமது கல்லூரிக்கென ஒரு உதைபந்தாட்டப் பாரம்பரியம் ஒன்றுண்டு அதைப் பேண முடியுமாயின் தொடங்குங்கள் அன்றேல் வேண்டாம்' என்றார். அவருடைய கட்டளை இன்று எவ்வளவு உணர்வு பூர்வமாக செயற்பட்டிருக்கிறது பார்த்தீர்களா என்கிறார் திரு. லிங்கநாதன்.

திரு. குகதாஸ் தொடர்கிறார் அதிபர், உபஅதிபர் எந்த வேளையிலும் எம்முடன் மைதானத்தில் நிற்பவர்கள் முக்கியமானது ஒழுங்குக் கட்டுப்பாடு. மேலும் எமது பழைய மாணவர்கள் டொமினிக், ஜெயகுமார், வசந்தன் கலா அண்ணர் ஆகியோரின் ஆதரவும், அர்ப்பணிப்பும் சொல்லும் தரமன்று. எமது கல்லூரிப் பயிற்றுனர் தற்பொழுது இல்லாது விட்டாலும் அவரைப்பற்றி அறிய வேண்டும் அவரது நேரம் தவறாமை, ஈடுபாடு ஒத்துழைப்பு களத்துக்கு உள்ளும், வெளியிலும் அவர் நடந்து கொள்ளும் பாங்கு எல்லாமே குறிப்பிடத்தக்கவை.

உரையாடலின் போது சில ஒளிக்கீற்றுகளையும் கூடக்கண்டோம் பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இவர்களின் அவல நிலையுணர்ந்து 45000/-பெறுமதியான உதைபந்தாட்ட அணிகள், உபகரணங்கள் அனுப்பி வைத்ததாக மிகவும் நெகிழ்ந்து கூறுகிறார்கள். இங்கும் தூர இடங்களுக்குச் செல்லும் போது பழைய மாணவர் கிங்ஸ்லி என்பார் தனது வாகனத்தை எமக்குத் தந்துதவுபவர் இப்படியான உதவிகள் எல்லாம் எமது நன்றிக்குரியதல்லவா என்கிறார்கள்.

இறுதியாக, நாம் 15 வயதிற்குட்பட்ட அணியொன்றை கோட்டமட்ட சாம்பியனாக்கிய தாகவும் ஆனால் இளநிலைப் பரீட்சை, மற்றும் தூர இடங்களில் பயிற்சியால் காலங்கடந்து இரவு வேளைகளில் கூட அவர்கள் வீடு செல்லவேண்டியேற்படுகிறது என்பதாலும் அந் நிலையில் அவ்வணியை நிறுத்திக் கொண்டோம். எனினும் திரு. ரகுதாஸ் அவர்களும்

## 3ஆவது தடவை

ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கையில் 15ஆவது நிமிடத்தில் மீண்டும் புனித ஹென்றியரசர் கல்லூரி அணிவீரர் கோல்டன்ராஜ் தனது அணிக்கான இரண்டாவது கோலையும் போட்டார்.

ஆட்டம் அரைப் பாதிவரை முழுவதும் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை சார்ந்ததாக இருந்தது. ஆட்டம் முதல் அரைப் பாதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் ஹென்றியரசர் அணி கோல்காப்பாளரை நோக்கி ஒரே ஒரு தடவை தான் பந்தினை செலுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இடைவேளையின் பின் ஆட்டம் தொடர்ந்து ஆரம்பித்த போது கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் தமது நிலைகளில் ஒரு சில மாற்றம் செய்து வேகமாக ஆடத் தொடங்கினர். இவ் அணி வீரர்களான பாபு, சஞ்சீவன் மிகவும் அற்புதமாக விளையாடினார்கள். இவர்கள் கோல் போடுவதற்கு எடுத்த பல முயற்சிகளை ஹென்றியரசர் கோல்காப்பு வீரர் திறமையாக தடுத்தாடினார். கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் இரண்டாவது பாதியாட்டத்தில் திறமையாக செய்த போதும் கோல் எதுவும் பெறாததினால் வெற்றி பெறும் வாய்ப்பை தவறவிட்டனர். 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற புனித ஹென்றியரசர்கல்லூரியினர் தொடர்ச்சியான மூன்று வருட சம்பியன் என்ற வகையில் மேஜர் முரளி ஞாபகார்த்த சுற்றுக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

இவ்வாட்டத்திற்கு ஏ. எவ். செபமாலைமுத்து மத்தியஸ்தராகவும், திருவாளர்கள் சிறிகரனும் தம்பிராசாவும் உதவி மத்தியஸ்தராகவும் கடமையாற்றியிருந்தனர்.

நாலில் ஒரு இடம் பெறும் திறமையுடையவர்கள் தான் என்கிறார்.

நாம் பல்வேறு சூழ் நிலைகளில் பல்வேறு வீரர்களை அணிகளைச்சந்திக்கும் போது பல வித உணர்வுகளுக்குள்ளாகின்றோம். வேதனைகளே அதிகம். ஆனால் ஒன்று தெரிகிறது. எல்லோரும் தோற்பரென்பதைத் தோற்கடித்து நிமிர்வோம் என்றே துணிகிறார்கள் செய்தும் காட்டுகிறார்கள் அதில் ஒரு பகுதியினரே புனித ஹென்றியரசர் கல்லூரிச் சமூகத்தினர்.




செல்விகள்

### கேதீஸ்வரன் ஐறீன் அபிநயா, யசின் வித்யா

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, 22, பேக்கரி லேனைச் சேர்ந்த திரு. திருமதி கேதீஸ்வரன் அமிர்தா தம்பதிகளின் அருந்தவப் புதல்விகள் ஐறீன் அபிநயா தனது 1-வது பிறந்த தினத்தை 18-12-94 அன்றும், யசின் வித்யா தனது 3-வது பிறந்ததினத்தை 25-12-94 அன்றும் தமது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அப்பா, அம்மா, அப்பப்பா, பாட்டா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா குடும்பம்(ஜேர்மனி), அன்ரா (லண்டன்), றஞ்சன் பெரியப்பா குடும்பம் (ஜேர்மனி), வித்தி மாமா, சுமதி மாமி குடும்பம், சின்ன பாட்டா குடும்பம், குணா மாமா (கொழும்பு), மதி மாமி குடும்பம், சவுதா அன்ரா, சாந்தி மாமி குடும்பம், ரதனி மாமி குடும்பம் (கொழும்பு), கொழும்பு அம்மம்மா குடும்பம், விஜி சித்தப்பா, நீக்கியண்ணா குடும்பம், நல்லம்மா அம்மம்மா குடும்பம், (அமெரிக்கா) பிறேம் சித்தப்பா, ராசாத்தி அம்மம்மா குடும்பம் (கொழும்பு), இந்திரன் மாமா (ஜேர்மனி), லண்டன் பாட்டா குடும்பம் (லண்டன்), தியாகராசா மாமா (கொழும்பு) இவர்கள் இருவரையும் அடைக்கல அன்னை அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

[10415, 10424] - அப்பப்பா குடும்பத்தினர்

**சிந்தனைக்கு..**

மெய்ப்பிக்கப்பட்டதை நம்புவது கூட சமய கொள்கையின் திரிபு என்றாக்குவது கேடு செய்வதாகும் என்பது உறுதி.

- கலிலியோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# மீண்டும் கூச்சல் கேட்கின்றது

சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கெதிரான தமது நடவடிக்கைகளை பௌத்த பேரினவாத சக்திகளும்- ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் பெரும் லாபம் ஈட்டிய பல்வேறு தரப்பினரும் தொடங்கிவிட்டனர் என்பதையே தற்பொழுது தென்னிலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இதன் ஒரு அங்கமாகவே பாப்பாண்டவர் வருகையை முன்னிட்டு பௌத்த பேரினவாதிகள் இடும் கூச்சல்கள் உள்ளன. இதற்கு பாப்பாண்டவர் பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் புத்தகம் ஒன்றை வெளியிட்டார் எனக் காரணம் கூறப்படினும், உண்மையில் இந் நடவடிக்கையானது சந்திரிகா அரசிற்கு எதிரான நடவடிக்கையே ஆகும்.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் அளித்த தீர்ப்பானது பௌத்த பேரினவாத சிந்தனையாளர்களுக்கு அவர்கள் கொடுத்த பலத்த அடியாகும். அவர்கள் அதில் இருந்து மீள்வதற்கு பல நாட்கள் சென்றது என்பதில் சந்தேகமே இல்லை. ஜனாதிபதித் தேர்தலில் அந்தளவிற்கு பெரும் தோல்வி ஒன்று அவர்களுக்குக் கிடைக்கப் பெற்றது.

இத்தேர்தலில் நேரடியாகவே பேரினவாதத்தின் பிரதிநிதிகளாகப் போட்டியிட்டவர்களும், பேரினவாதத்திற்கு இதுவரை தலைமை தாங்கியவர்களும் போட்டியிட்டனர். அவர்கள் இனவாதத்தைக் கக்கிய போதும் வரலாறுகாணாத படுதோல்வியையே சந்திக்க வேண்டிய நிலை இருந்தது. அந்தளவிற்கு, சிங்கள மக்கள் பேரினவாதத்தினரின் செயற்பாட்டை வெறுத்தார்கள் என்பதே உண்மையாகும்.

இந்நிலையில் தான் தேர்தல் தோல்வியின் பின் சுமார் மூன்றரை மாதங்களாக பௌத்த பேரினவாதிகள் மௌனமாகவே இருந்து வந்தார்கள். வெளிப்படையான அவர்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், முற்றாக அது நிற்கவில்லை மறைமுக

# வேலை நிறுத்தத்தை தடுக்க பொலிஸ் உடனடி நடவடிக்கை

## பிரதிப்பொலிஸ் மாஅதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

வேலைத்தளம்ஒன்றில்ஊழியர்களினால் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படுமிடத்து பொலிசார் உடனடியாகவே அங்கு பிரவேசித்து அத்தளத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவர். அங்கு சட்டம், ஒழுங்கு நடவடிக்கை பின்னர் எடுக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் பிராங்டி சில்வா அறிவித்துள்ளார்.

வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்படின் பொலிசார் மேற்கொள்ள வேண்டிய கடுமையான நடவடிக்கைகள் குறித்து அரசினால் விடுக்கப்பட்ட பணிப்புரை தொடர்பாக பொலிஸ்மா அதிபர் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார். அதில் மேலும், வேலைத்தளமொன்றில் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுமிடத்து உடனடியாகவே பொலிசார் அந்த வேலைத் தளத்திற்கு விரைந்து அதை தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அப் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட எந்த தரப்பினருக்கும் பாதகமான வகையில் வன்முறைகள் உருவாவதை தடுக்க நடவடிக்கைஎடுப்பர். சம்பந்தப்பட்ட நிறுவன உடமைகளுக்கு சேதம் உண்டாகாத வண்ணம் பார்த்துக் கொள்ளப்படும்.

வேலை நிறுத்தக்காரர்களுக்கும் தொழில் கொள்வோருக்கும் இடையில் சமரச பேச்சுகள் சம்பந்தப்பட்ட வேலைத்தளத்திற்குவெளியே பொதுவான இடமொன்றில் நடாத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# எங்களுக்கு என்று ஒரு காலத்தை உருவாக்கியவர் எமது தலைவர்

## கலைஞர்கள் பாராட்டு விழாவில் இளம்பரிதி

(தென்மராட்சி)

''எங்களுக்கு என்று ஒரு காலத்தை உருவாக்கியவர் எமது தலைவர். இந்தக் காலத்தில் இடம்பெறும் சம்பவங்களை, வீரச் செயல்களை கலைவடிவமூடாக மக்களுக்கு வடித்துக்காட்ட வேண்டும்''.

இவ்வாறு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தெரிவித்தார்.

தென்மராட்சி பகுதியில் உள்ள அனைத்து கலைஞர்களையும் கௌரவிக்கும் விழா நேற்றுமுன்தினம் யா/சாவகச்சேரிஇந்துக்கல்லூரியில் தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் திரு. அன்பு தலைமையில் இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, தமிழீழ கலை பண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் திரு. அன்பரசன், யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. குமணன், புலிகளின் குரல் பொறுப்பாளர் திரு. வின்சன், தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு.வெற்றிச்செல்வன், தென்மராட்சி கோட்ட பொறுப்பாளர் திரு. வீமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலைஞர்களைக் கௌரவித்து இளம்பரிதி, வெற்றிச்செல்வன், அன்பரசன் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

திரு.இளம்பரிதிதொடர்ந்து உரை நிகழ்த்துகையில், ஒரு கிணறு தோண்டத்தோண்டத்தான் தண்ணீர் வரும். இதே போல்தான் எமது தலைவர் எமது மக்களுக்கு வீரம் இருக்கிறது இந்த வீரத்தை ஊட்டி ஊட்டித்தான் வளர்த்து வருகின்றார்.

எமது தலைவர் எமது இனத்தின் விடிவிளக்காக நிற்கிறார், இந்தத் தலைவரின் கரத்தினை பலப்படுத்துவது எமது மக்கள். இந்த மக்களுக்கு விளங்க வைப்பது கலைஞர்கள்தான் என்றார்.

(86)

# மலேரியா ரத்தபரிசோதனை பழைய இடத்திற்கு மாற்றம்

[குருநகர்]

இதுவரைகுருநகரில் இயங்கி வந்த மலேரியா தடுப்பு இரத்தப் பரிசோதனை நிலையம் மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

குருநகர் தங்கம்மா ஞாபகார்த்த சுகநல சேவை நிலையத்தில் இயங்கி வந்த இரத்தப் பரிசோதனை நிலையம் யாழ்.மத்திய மருந்தகத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமான நோயாளர்கள் இனி யாழ். மத்திய மருந்தகத்திற்கு மாற்றமாகியுள்ள மலேரியா தடுப்பு இரத்தப் பரிசோதனை நிலையத்துடன் தொடர்பு கொண்டு தமது தேவைகளைப் பெறலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# சித்த மருத்துவ நூல்களை மறுபதிப்பு செய்ய முயற்சி

(வடமராட்சி)

பழைய சித்த வைத்திய ... பதிப்பு செய்வதற்கு அது பற்றிய விளக்கங்களை சேகரித்து

# விஞ்ஞான பாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள வலயம் 1 பாடசாலை ஆசிரியர்களுக்கான க. பொ. த. உயர்தர விஞ்ஞான பாட செயலமர்வுகள் 20, 21, 22-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

20-ம் திகதி விலங்கியல் பாட செயலமர்வு யாழ்

# கரை புரண்டவெள்ளத்தில் அள்ளுண்ட யானைகள்

(கொழும்பு)

மொனராகலை, வெள்ளவாயா பகுதிகளில் பெய்து வரும் மழையினால் கரை புரண்டோடும் கிரிந்தி ஓயாவில் இரண்டு யானைகளும் நூற்றுக்கணக்கான எருமை மாடுகளும் அள்ளுண்டு செல்லப்பட்டுள்ளன.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட யானை ஒன்று சம்பவம் நடந்த இடத்திலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ள இடத்தில் மீட்கப்பட்டது. மற்றைய யானைக்கும் எருமைகளுக்கும் நடந்த கதி தெரியவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# வீடமைப்பு கடன் வழங்க தனியான வங்கி அமைப்பு

குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கும் மற்றும் நடுத்தர வகுப்பினருக்கும் வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்காக விரைவில் தனியான வங்கி ஒன்று அமைக்கப்படவுள்ளதாக வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பத்து சதவீத வட்டியில் ஆகக்கூடுதலாக மூன்று இலட்சம் ரூபாவரை இவ்வங்கி கடனடிப்படையில் வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அனுராதபுரப் பகுதியில் எலிகளால் பரவும் நோய்

எலிகளின் சிறுநீர் நீரில் கலப்பதால் ஏற்படும் ''லெப்டோஸ் பிரோசிஸ்'' என்னும் நோய் அனுராதபுரம் பகுதியில் பரவி வருகின்றது.

சுமார் 28 பேர் இதுவரை இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்குள்ள குளங்களில் குளிப்பதனால் இந்நோய் தொற்றிவருவதாக வைத்திய அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

தலையிடி, உடல்நோ, உடல் மஞ்சள் நிறமாக மாறுதல் போன்றவை இந்நோயின் அறிகுறிகளாக உள்ளதாகவும் வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அண்மைய மழையினால் மட்டு. மீனவரும் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் அண்மையில் பெய்த பெரும் மழையால் சுமார் 15,500 க்கும் அதிகமான மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களில் பலவும் வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு பகுதியில் விவசாயக் குடும்பங்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், செய்கை பண்ணக்கூடிய 57,000 ஹெக்டயர் நிலப்பரப்பில் சுமார் 28,000 ஹெக்டயரில் மட்டுமே நெல் செய்கை பண்ணப்பட்டதாகவும் இதிலும் 75 வீதமானவை அண்மைய கடும் மழையினால் பாதிக்கப் பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

# அரசு தன்னைக் கவனிக்கவில்லையாம்

## தொண்டமான் கவலை

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில்-அமைச்சர் பதவி கிடைத்தும் அரசாங்கம் சரிவரத் தன்னைக் கவனிக்கவில்லைஎனஇ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான் தனக்கு நெருங்கியவர்களிடம் கூறிவருவதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துடன் இணைந்த விடயத்தில் அவசரப்பட்டுவிட்டேனோ தெரியவில்லை எனவும் அவர் கூறியதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கள் மௌனமாகவே இருந்து வந்தார்கள். வெளிப்படையான அவர்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், முற்றாக அது நிற்கவில்லை மறைமுகமாக பேரினவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட வண்ணமே இருந்தனர்.

இந்த நிலையில் தான் பாப்பரசரின் வருகை பேரினவாதிகளுக்கு வாய்ப்பாக இருந்தது. பாப்பரசரின் வருகைக்கு எதிராகபௌத்தத்தின் காவலர்களாகத்தம்மைக் காட்டிக் கொண்டு களத்தில் இறங்கியுள்ளனர்.

ஆனால் இதற்குப் பின்னால் தனியாக மதவிவகாரம் இல்லாதது போன்று தனியாக அடிப்படை மதவாதிகள் மட்டும் காரணமுமல்ல. கடந்தகால ஐக்கிய தேசியக்கட்சியில் லாபம் அனுபவித்த பலரது கையும் இதில் இருக்கும் என்று நம்பிக் கூறலாம். இதில் உயர் நிர்வாகஅதிகாரிகள், படைத்தளபதிகள் கூட அடங்கக் கூடும்.

ஏனெனில் இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் அனுபவித்த சலுகைகளும், ஈட்டிய லாபங்களும் கொஞ்சநஞ்சமல்ல. இதில் அனேகர் பெரும் கோடீஸ்வரராகியுள்ளனர். இவர்களுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் வருகை அவ்வளவு உவப்பானதாக இல்லை. அதிலும், குறிப்பாக வடக்கு-கிழக்கு யுத்தத்துடன் சம்பந்தப்பட்ட எவரும் சந்திரிகா அரசின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் அளவில் இல்லை.

இந்த நிலையில் தான், பாப்பாண்டவர் வருகையுடன் பௌத்த பேரினவாதத்திற்கு உற்சாகம் ஊட்டும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன எனலாம். மதத்தின் பேரால் அரசாங்கத்திற்கு எதிரான சக்திகள் மதப்பூசல்களை இளறிவிடத் தீர்மானித்துள்ளன.

ஆனால் இது மட்டும் தான் அவர்களின் முயற்சி என்று கூறுவதற்கில்லை. அண்மையில் தென்னிலங்கையில் இடம்பெற்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, தற்பொழுது நடைபெற்று வரும் வேலை நிறுத்தங்கள், தனியார் கம்பனிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் எழுந்துள்ள பிரச்சினைகள் போன்ற பல பிரச்சினைகளிலும் இவற்றின் கை இல்லாமல் இல்லை.

இந்த வகையில் பாப்பாண்டவருக்கு எதிராக பௌத்த பேரினவாதிகள் போடும் கூச்சலானது கத்தோலிக்க மதத்திற்கு எதிரானது மட்டுமல்ல, சந்திரிகா அரசிற்கு எதிரான நடவடிக்கையுமே ஆகும். இந்த நிலையில் சந்திரிகா அரசாங்கம் தீர்க்கமான முடிவெடுத்து ஆட்சி நடத்தத் தவறின் பௌத்த பேரினவாதத்தின் பெயரால் ஏனைய சக்திகள் ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சி பீடத்தில் ஏறிவிடும். சில சமயம் அவர்கள் பௌத்தத்தின் பெயரால் முடிசூடிக் கொள்ளப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

(வடமராட்சி)

பழைய சித்த வைத்திய நூல்களை மறுபதிப்பு செய்ய வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆயுள்வேத பணிப்பாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

பரராசசேகரம் செகராசசேகரம் சொக்கநாதர் தன் மந்திரியம் இருபாலைச் செட்டியார் ஆகிய பழைய சித்த வைத்திய விளக்கங்களை மறுபதிப்பு செய்வதற்கு அது பற்றிய விளக்கங்களை சேகரித்து அனுப்புமாறு வடக்கு-கிழக்கு சித்த வைத்தியப் பணிப்பாளர் திரு. பூ. உரோமகேஸ்வரன் சகல சித்த வைத்தியர்களையும் கேட்டுள்ளார்.

இதுபற்றிய கடிதங்களை சம்பந்தப்பட்ட சித்த வைத்தியர்களுக்கு மேற்படி பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ளார்.

(யோ)

20-ம் திகதி விலங்கியல் பாட செயலமர்வு யாழ் இந்துக்கல்லூரியிலும் 21-ம் திகதி பௌதிகவியல் செயலமர்வு பற்றிக்ஸ் கல்லூரியிலும், 21-ம், 22-ம் திகதிகளில் தாவரவியல் பாட செயலமர்வு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுகளில் க. பொ. த. உயர்தர விஞ்ஞான வகுப்புகளில் மேற்படி பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்

# செம்மணி வீதிப் பகுதியில் வாலிபர்கள்மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பட்டப் பகலில் இனந்தெரியாதோர் வழி மறித்துத் தாக்கியதில் இளைஞன் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

அண்மையில் நண்பகல் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த மூவரை செம்மணி வீதியில் வைத்து இனம்தெரியாத ஐவர் தாக்கியதாகவும் இதனால் மூவரில் ஒருவரான பாக்கியநாதன் என்பவர் மண்டை உடைந்து படுகாயம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

பகைமையினாலா அல்லது வழிப்பறி நோக்கிலா இத் தாக்குதல் நடைபெற்றது என்பது பற்றி தெரியவில்லை என்றும் தாக்கிய ஐவரில் இருவரை சம்பவம் நடந்த சில மணி நேரத்திலேயே தாம் கைது செய்துவிட்டதாகவும் தமிழீழ காவல் துறையினர் தரப்பில் கூறப்பட்டது.

(22)

## இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் சுண்டுக்குளி வடக்கு சனசமூக நிலையத்தில் 35 பேருக்கு யாழ். லயன்ஸ் கழகத்தால் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்படும். இந்நிகழ்வில் 'நீரிழிவு வராமல் காப்பதெப்படி' என்பது பற்றி டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன் அவர்களும், 'வாய்ச்சுகாதாரம்' என்பது பற்றி டாக்டர் ஜீவானந்தம் அவர்களும் உரையாற்றுவார்கள்.

## மாதாந்த உதவிப் பணம்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஒன்பது மாத நிலுவைப்பணம் டிசம்பர் மாத நிலுவைப்பணம் டிசம்பர்மாத உதவிப் பணத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளதாக சமூக சேவை உத்தியோகத்தர் திரு. என். இராசலிங்கம் தெரிவித்தார்.

உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான நிலுவைப் பணமே டிசம்பர் மாத உதவிப் பணத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளது. (யோ)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-12-18

### ஞாயிறு இரவு

08. 01 - இசையரங்கம் நிகழ்ச்சியில் ந. ராஜன், சு. கண்ணன் அவர்களின் நாதஸ்வரக் கச்சேரி.
08.30 - செய்திகள்
08.40 - தொடர்நாடகம்- பொன். கணேசமூர்த்திஎழுதும் 'இலங்கை மண்' 51-ம் அங்கம்
09.00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### 1994-12-19

### திங்கள் காலை

07.02 - மாவீரவணக்கம்
07.15 - நீங்கள்கேட்டவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08 00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# இரு வருடங்களில் 3007 பேர் மறைவாம்

(திருநெல்வேலி)

1989 - 91 காலப்பகுதியில் சிறிலங்காவின் தென் பகுதியில் 3007 பேர்காணாமல் போயுள்ளதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவர்களுக்கென 3007 பைல்களை இந்த அமைப்பு உருவாக்கியுள்ளது. இவ்வாறு காணாமல் போனவர்கள் பெரும்பாலும் ஊவா சப்ரகமுவா, வடமத்தியமாகாணங்களைச் சேர்ந்தவர்களே காணாமல் போயுள்ளனர். காணாமல் போனவர்கள் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் என கருதப்படுகிறது.

(27)

## வெண்புறா இயக்குனர் தெரிவு

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவன தலைவராக.வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்கினியன் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற இயக்குனர் தெரிவு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக வீ. ரி. சிவலிங்கமும் செயலாளராக மா. ஞானேஸ்வரனும் பொருளாளராக செல்விக.சின்னத்துரையும் தெரிவாகினர்.

சபை உறுப்பினர்களாக த. சண்முகலிங்கம், வைத்திய கலாநிதிகளானக.சிவபாலன், ரி. பரமசிவம், ந. சிறிஸ்கந்தராசா. பொ. பரஞ்சோதி மற்றும் விஜயபாலன் திருமதி கி. சிந்திஜா ஆகியோர் தெரிவாகினர்.

## மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் சபையின் மணிவாசகர் விழா இன்று 18 ஆம் திகதி சித்தன் கேணி சிவசிதம்பரேஸ்வர் தேவஸ்தான மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

# அகதி முகாமில் வாழ்ந்த மாணவன் 3ஏ,சி, சித்தி

(மட்டக்களப்பு)

நான்கு வருட காலமாக அகதிமுகாமில் தங்கியிருந்து பாடசாலை சென்று வந்த மாணவன் ஒருவர் க. பொ. த (உ/த) பரீட்சையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளார்,

காரைதீவு விபுலானந்த மத்திய மகாவித்தியாலயத்தில் பயின்ற எஸ். இளங்கோ என்ற மாணவன் உயிரியல் விஞ்ஞான பிரிவில் 3 ''ஏ''க்களையும் ஒரு ''சி''யையும் பெற்றுள்ளார்.

இம்மாணவனின் திறமையை பலரும் பாராட்டியுள்ளனர்.

# வெளிச்சம் மார்கழி இதழ் நாளை வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' மார்கழி இதழ் நாளை வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய மாவீரர் நாள் செய்தியுடன் பிரம்மஞானியின், 'அபத்தமும் அர்த்தமும்' தொடர்கட்டுரை, இயல்வாணனின் சிறுகதை, அடேல் ஆனின் 'உடையாத விலங்குகள்' தொடர்கட்டுரை, நா. யோகேந்திரநாதனுடனான நேர்காணல், சோ. கிருஷ்ணராசாவின் 'அமைப்பியல் வாதம்' பற்றிய கட்டுரை ஆகியன இடம்பெறுகின்றன. இன்னும் வீ. பரந்தாமன், பொன்னிலா, த. ஜெசீலன், புதியபாரதி, ம. ஆனந்தன், மீசாலையூர்க் கமலா ஆகியோரின் கவிதைகளையும் தாங்கி இந்த இதழ் வருகின்றது.

இது வெளிச்சத்தின் முப்பத்தி இரண்டாவது இதழ் என்பது குறிப்பிடத்தக்கது.

கிராண்பாஸ் குண்டுவெடிப்பு;

# பொதுகூட்ட புகைப்படங்கள் இருப்பவர்கள் ஒப்படைக்குக!

## பொலிஸ் தலைமையகம் கோரிக்கை

காமினி திசாநாயக்கா கொல்லப்பட்ட ஜனாதிபதி தேர்தல் பிரசார கூட்டத்தில் காமினி திசாநாயக்கா உரையாற்றும் போது அங்கிருந்த சனக்கூட்டத்தைப் புகைப்படம் எடுத்தவர்களையும் வீடியோ படம் பிடித்தவர்களையும் தாங்கள் எடுத்த படங்களை விசாரணைக்காகப் பொலிசாரிடம் ஒப்படைக்கும்படி சிறிலங்காவின் பொலிஸ் தலைமை அலுவலகம் கேட்டுள்ளது.

பொலிஸ் சி. ஐ. டி. பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளுடன் இது சம்பந்தமாகப் படப் பிடிப்பாளர்களை தொடர்பு கொள்ளும்படி பொலிசார் கேட்டுள்ளனர்.

இக் குண்டுவெடிப்பின் போது உயிரிழந்தவர்கள் அல்லது காயமடைந்தவர்களின் உடைமைகள் கண்டெடுக்கப்பட்டு அவை இப்பொழுது பொலிஸ் சி.ஐ.டி. பிரிவில் வைக்கப்பட்டுள்ளன எனவும் இந்த பொருள்களை உரியவர்களிடம் திருப்பியளிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

இந்தப் பொருள்களுக்கு உரிமை கோருபவர்கள் சி.ஐ. டி. பொலிஸ் பிரிவுக்கு நாளை முதல் 24-ம் திகதிவரை செல்லலாம் என கூறப்படுகிறது-

# இன்றில்லாதுவிட்டால் என்றுமே போராட்ட இலக்கியம்படைக்கமுடியாது

**-இளங்குமரன்**

(யாழ்ப்பாணம்)

இந்தச் சூழலில், இக்காலத்தில் போராட்ட இலக்கியம் படைக்க முடியாவிடில் வேறு எக் காலத்திலும் இது படைக்க முடியாமல் போய்விடும்.

இவ்வாறு தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் தெரிவித்தார். நேற்று மாலை யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற யாழ். இலக்கிய பேரவையின் 93ஆம் ஆண்டின் சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசும் போது, இந்த மண்ணில் நடைபெறும் போராட்ட நிகழ்வுகள் இலக்கியங்களாகப் படைக்கப்பட வேண்டும். எமது தலைவர் இந்த மண்ணை மீட்டெடுப்பதுடன் எமது கலாசாரம், பண்பாடுகளை பேணுவதற்கும் பெரும் அக்கறை செலுத்திவருகின்றார். இதற்காகவே தலைவர் அவர்களால் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் போராளிகளான இருவரின் நூல்கள் பரிசில்களைப் பெறுகின்றன. இந்த இரு நூல்களும் போராட்ட நிகழ்வுகளின் பதிவாகவே அமைகின்றன. போராளிகள் தவிர்ந்த வெளியில் உள்ளவர்களும் சமகால நிகழ்வான போராட்ட இலக்கியங்களை படைக்கவேண்டும். இது இந்த மண்ணின் தேவையுமாகும் என்றார்.

## கலைவிழா

(யாழ்ப்பாணம்)

நவீன பாலர் பாடசாலை, கலைவாணி பாலர்பாடசாலை ஆகியவற்றின் கலைவிழா இன்று பிற்பகல் 2மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் கலந்து கொள்வார். சிறுவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெறும்.

**யாழ்.வைத்தியசாலை தாதியரின்**

# சீருடைக் கொடுப்பனவு வழங்காமையிட்டு அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை தாதிய உத்தியோகஸ்தர்களின் சீருடை கொடுப்பனவான ஐயாயிரத்து இருநூறு ரூபா இன்னமும் வழங்கப்படாதது குறித்து தாதிய உத்தியோகஸ்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கொடுப்பனவு கடந்த ஓகஸ்ட் மாதவேதனத்துடன் சேர்த்து வழங்கப்படவேண்டுமென சுகாதார அமைச்சினால் நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டும் இதுவரை தமக்கு அக்கொடுப்பனவை வழங்காதது ஏன் என தமக்கு தெரியவில்லையெனவும் தாதிய உத்தியோகஸ்தர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இவ்வருடம் முடிவடைவதற்குள்ளாவது தமக்கு நிர்வாகம் இக்கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்குமா எனவும் அவர்கள் கேட்கின்றனர். (சி)

# கிணற்றில் தவறி வீழ்ந்த குடும்பஸ்தர் மரணம்

கிணற்றினுள் தவறி வீழ்ந்ததில் இறந்ததாக கூறப்படும் குடும்பஸ்தர் ஒருவரின் உடலை சுன்னாகம் காவல்துறையினர் விசாரணைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று ஒப்படைத்தனர்.

இணுவில் கிழக்கைச் சேர்ந்த தம்பையா திருஞானசம்பந்தர் (வயது 45) என்பவரே இவ்வாறு இறந்தவராவார்.

மேற்படி இறந்தவரின் உடல் விசாரணையின் பின்னர் உறவினரிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டது. (சி)

# இணைந்த பல்கலை.கல்லூரி "ராக்கிங்" அதிகரிப்பு

(நவாலி)

வவுனியா இணைந்த பல்கலைக்கழக் கல்லூரியில் புதிய கல்வியாண்டு மாணவர்களுக்கு சிரேஷ்ட மாணவர்கள் பல துன்புறுத்தல்களை 'ராக்கிங்' என்ற போர்வையில் நடாத்துவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய மாணவர்கள் ஆடம்பரமான உடுப்புக்கள் அணியக் கூடாது என்றும் ஆண்களின் தலைமயிரை மொட்டையாக வெட்டியும் வருவதுடன் பல்கலைக் கழக வளாகத்திலும் வீதிகளிலும் மோசமான முறையில் ராக்கிங் செய்து வருகின்றனர்.

வவுனியா இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில் சிரேஷ்ட மாணவர்களின் நடவடிக்கையினால் சில மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ''ராக்கிங்'' முயற்சியில் சிரேஷ்ட தமிழ் சிங்கள முஸ்லிம் மாணவர்கள் ஈடுபட்டுவருவதாகத் தெரியவருகிறது. (05)

# தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்திக்க நடவடிக்கை

(கொழும்பு)

தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை அடுத்த வருடத்தில் 65 சதவீதமளவில் குறைக்கப்படும் என கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலைகளுக்கான ஆய்வுகூடத் தேவைகள் உட்பட அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்

# புதிய அரசைக் காப்பது தொழிலாளர் கடமை

## சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கோரிக்கை

(கொழும்பு)

தொழிற்சங்கப் பிரச்சினை என்னதான் இருந்தாலும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை பாதுகாக்க வேண்டியது தொழிற் சங்கங்களின் பொறுப்பாகும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியும் வலியுறுத்தியுள்ளன.

அக்கட்சிகள் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சர்வதேச மோசடிக்காரர்கள், ஆயுத வியாபாரிகள், பாதாள உலகத்தின் நபர்கள் எல்லோரும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை நிர்மூலம் செய்ய கங்கணம் கட்டியிருக்கிறார்கள். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை நிலைகுலையச் செய்வதற்கு சாத்தியமான சகல வழி முறைகள் சகலதையும் இத்தீய சக்திகள் பயன்படுத்துகின்றார்கள். முதலீட்டுச்சபை தொடர்பான திட்டங்களில் பணயம் வைப்புகளை செய்வதன் மூலமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அச்சுறுத்தவும் இவர்கள் முயற்சிக்கின்றனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

**ராணுவ**

வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொதுஜனஐக்கியமுன்னணி அரசாங்கம் பதவி ஏற்ற பின்னர் போர் நடவடிக்கைகளில் நேரடியாக பங்குபற்றிய அதிகாரிகளுக்கே பதவியுயர்வு வழங்கப்படும் என்ற கருத்தினை தெரிவித்திருந்தது. இதனடிப்படையில் செய்யப்பட்டு வரும் பதவியுயர்வுகள் இராணுவ தலைமை அலுவலகங்களிலும் வேறு பணிகளிலும் ஈடுபட்டு வரும் உயரதிகாரிகளுக்கு சினத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வழங்கியுள்ள புதிய பதவி உயர்வுகள் இராணுவ உயர் மட்டங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**விமானநிலைய**

தர்மசிறிசேன நாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளையில் பாதுகாப்புப் பிரதியமைச்சரிடம் திருமதி ஆர்.புலேந்திரன் கேள்வி எழுப்பிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை விளையாட்டு மைதானம், மயானம் ஆகியன அமைந்துள்ள பிரதேசத்தை விடுவிக்குமாறு திருமதி ஆர். புலேந்திரன் கேட்டிருந்தார்.

**அதிகாரிகளை**

கவும் கொழும்பில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

**விடைத்தாள்**

ஒவ்வொரு பாடத்திற்குமான விடைத்தாள் மீள் பார்வை செய்வதற்கான கட்டணம் நூறு (100) ரூபா ஆகும் இப்பெறுமதியை விண்ணப்பப்படிவத்தில் முத்திரையாக ஒட்டி அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர், (பா)

**கடற்படையிலும்**

கப்டன் டி. டபிள்யூ ராஜரட்னா தனது திட்ட நடவடிக்கை கொள்கைப் பொறுப்பாளர் பதவியுடன் தனிநபர் பயிற்சிக் கல்லூரி பொறுப்பையும் ஏற்கின்றார்.

**சிலரின்**

தயங்கப் போவதில்லை என்றும், கட்சியிலுள்ள குறை


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

தினசரி 4. 30, 6.30

சனி, ஞாயிறு 10. 30, 4. 30, 6. 30

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்

★ எல்லைக் கற்கள் ★

(முழு நீள வர்ணப்படம்)

தினசரி பி.ப 2.30க்கு மட்டும்

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்



கணக்கியல்|கணக்காய்வ


## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாலலோசன் செல்வராணி

துர்க்கையம்மன் கோவிலடி தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாலலோசன் செல்வராணி (விஸ்வமடு) 17-12-94 நேற்றுக் காலமானார். அன்னார் காலம் சென்ற பொலிஸ் அதிகாரி செல்லப்பா, ஜானகியம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சிவ

நிதர்சனமும் இணைந்து திரைப்படப் பிரிவின்
தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்

★ பிஞ்சு மனம் ★

(வர்ண முழுநீளப்படம்)

(சி- 10922)

## இரண்டாம் ஆண்டு இதய அஞ்சலி



மலர்வு:- '12- 07- 1933

உதிர்வு:- 18- 12- 1992

### செபமாலை சிசிலியா

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
உன் துயர் மாறாதம்மா
எங்களின் இதயக் கமலமாக
ஒளி தந்த தாயே
உன் உடல்தான் மறைந்தாலும்
உன் நினைவு எங்கள் மனதில்
என்றும் பிரகாசித்துக் கொண்டே இருக்கும்
உங்களின் அன்புத் துணைவரும்
இனிய குழந்தைகளும்
அன்பு மருமக்களும்
உடன் பேரப்பிள்ளைகளும்
எங்கள் இதய அஞ்சலியை
தெரிவித்துக் கொள்கிறோம்.

இராச வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (10432) - குடும்பத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம், இலக்கத்திலுள்ள ஈழநாதம்பணிமனையில்1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

துள்ளார்.

த்தப்படுகின்றனர், (பா)

## கணக்கியல்|கணக்காய்வு

## பயிற்சிநெறி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையால் நடாத்தப்பட்டுவரும் கணக்கியல்/கணக்காய்வுப் பயிற்சிக் கல்லூரியின் அடுத்த கல்வியாண்டிற்கு (1995) தெரிவு செய்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் வரையறைகளுக்கிணங்க க. பொ. த உயர்தரத் தேர்வில் வர்த்தகப் பிரிவில் தேறியவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**வரையறைகள்:**

01. பயிற்சிநெறி நிறைவடைந்தபின் நிதித்துறையால் செயற்படுத்தப்படும் தொழில் முயற்சிகளில் தகுந்த ஊதியத்தில் பொருத்தமான பணியில் அமர்த்தப்படுவர்.

02. ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்காவது பணியாற்ற வேண்டும்.

03. பயிற்சிக்காலத்தில் அல்லது ஐந்து ஆண்டு பணிக்காலம் நிறைவடைவதன்முன் விலகவிரும்புவோர் பயிற்சிச் செலவை மீளளிக்க வேண்டும்.

★ வேண்டுகை அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கணக்கியல்/கணக்காய்வுப் பயிற்சிநெறி'' எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

★ பயிற்சி நெறிக்கான செலவு முழுவதும் எம்மால் ஈடுசெய்யப்படும்.

★ வேண்டுகை முடிவு நாள் 28 - 12 - 94

அனுப்பவேண்டிய முகவரி:-

**வருவாய்ப் பகுதிச் செயலகம்,**
**நிதித்துறை,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(சி-10938)

பொறுப்பையும் ஏற்கின்றார்.

### சிலரின்

தயங்கப் போவதில்லை என்றும், கட்சியிலுள்ள குறைபாடுகள் காரணமாகவே நாட்டிலுள்ள இளைஞர்கள் கட்சிக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சந்திரிகா அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எண்ணம் எமக்கில்லை. அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வாய்ப்புத் தரப்பட வேண்டும்.

அரசாங்கத்தின்முற்போக்கு நடவடிக்கைகளுக்கு ஐ.தே.க முட்டுக்கட்டையாக இருக்காது எனவும் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்காவின் இக்கருத்து குறித்து பி. பி. சி விமர்சிக்கையில்,

அரசாங்கத்துக்கு பொருளாதார பிரச்சினைகள் பெரிதாகி வரும் இத்தருணத்தில் அரசு தன்னையே தூக்கிலிட்டுக் கொள்ள போதுமான ளவு நீண்ட கயிற்றைக் கொடுப்பதாக அவரது அறிவிப்பு அமைகிறது என அரசியல் விமர்சகர்கள் கருதுவதாக குறிப்பிட்டுள்ளது.

இம்மாநாட்டில் உரையாற்றியமுன்னாள்அமைச்சரும்ஐ.தே.க தவிசாளருமான ஏ.சி. எஸ். ஹமீட், அரசாங்கத்தை குறுகிய காலத்தில் தோற்கடித்து ஆட்சியை கைப்பற்றும் நோக்கம் கட்சிக்கு இல்லை எனவும்தெரிவித்தார்.

### பௌத்தம்

யமானதே. பாப்பரசருக்கு பௌத்த மதம் பற்றிய பூரண அறிவு இல்லாமையே அவர் செய்த தவறுக்கு காரணமாகும். இதற்காக அவர் மன்னிப்பு கேட்பதை தவிர வேறு வழியில்லை.

பாப்பரசர் இதற்கு முன்னரும் கன்னியாஸ்திரிகள் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களுக்கு பலமாக எதிர்ப்புக் கிளம்பியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

துர்க்கையம்மன் கோவிலடி தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாலலோசன் செல்வராணி (விஸ்வமடு) 17-12-94 நேற்றுக் காலமானார். அன்னார் காலம் சென்ற பொலிஸ் அதிகாரி செல்லப்பா, ஜானகியம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சிவபாலலோசனின் அன்பு மனைவியும், சிவானந்தவதனி (சரவணபவானந்த வித்தியாலய ஆசிரியை), ஆனந்ததர்சினி (யூனியன் கல்லூரி விஞ்ஞான பிரிவு மாணவி), ஜெயகௌரி (கிறிஸ்தவகல்லூரி கலைப்பிரிவு மாணவி), கௌரீஸ்வரன் (சரவணபவானந்த வித்தியாலய மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாவித்திரி, கமலநாயகி, செல்வரத்தினம் (ப. நோ. கூ. சங்கம் தெல்லிப்பழை), ஜெயலட்சுமி, யோகேஸ்வரி, உதயகுமார் (டோயா-போக்குவரத்துப் பிரிவு சாரதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம் சென்ற ஆசிரியர் பொன்னம்பலம் மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று (18- 12- 94) பிற்பகல் 2 மணிக்கு அவரது தற்போதைய வதிவிடமான 'சரஸ்வதி வாசம்' கோப்பாயில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பொ. சிவபாலலோசன்**
(கணவன்)

'சரஸ்வதி வாசம்'
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

[10433]

## சீவரத்தினம் பாக்கியம்

சங்கானை கிழக்கைச் சேர்ந்த சீவரத்தினம் அவர்களின் அன்பு மனைவி பாக்கியம் (17-12-94) நேற்று மாலை காலமாகிவிட்டார். இவர் பரந்தாமன் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), தனஞ்செயன் (வெள்ளைதம்பி), பாக்கியலக்சுமி, சரவணபவானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தையல்நாயகி, யோகேஸ்வரி, பராசக்தி (சுவிஸ்), சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜிதா (கனடா), சுகிர்தா (கனடா), பகீரதன், ஜெனிதா, வரகுணன், கயமுகன், சஞ்செயன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் லதீசனின் (கனடா) பூட்டியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 - 12 - 94 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பரந்தாமன்**
(மகன்)

'பாக்கிய வாசா'
சங்கானை.

[10434]